பால விஜயா

தொகுதி ௨ பகுதி ௧

செப்டம்பர் 1931

188786

Regd. No. M 4573.

26

பாலவித்யா சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் சஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20 அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

5-OCT 1931

188786

பாலவித்யா.

(மாதப் பத்திரிகை)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

தொகுதி II	1931ஆம் செப்டம்பர்மீ பிரஜோத்பத்திஆம் புரட்டாசிமீ	பகுதி IX

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

நீங்கள் பிற்காலத்தில் மகிழ்ச்சி அடையவேணுமாயின் தேனினும் இனிய இந்த உன்னத ஞானநாவல் பொக்கிஷமாகிய "பாலவித்யாவை" பெற்று மகிழ்ச்சி அடையுங்கள். சந்தா இந்தா! என்று இன்றே தாருங்கள்.

ஒரு சந்தாதாரர்.

விகடவினோதங்கள்.

தகப்பனார்:—ராமு! அவர் எங்கே அவசரமாய் ஓடுகிறார்?

ராமு:—அவரா? அப்பா! அவரை அவர் மனைவி அடித்துவிட்டாளாம். அதற்காக போலீஸ் ஸ்டேஷனில் ரிபோர்டு செய்யப் போகிறார்.

தகப்பனார்:—மனைவி அடித்துவிட்டால் போலீஸில் சொல்லப் போவதேன்?

ராமு:—இல்லை அப்பா! அவரை பின்னிட்டு அவர் மனைவி அடிக்காமல் இருப்பதற்கு சொல்லப்போகிறார்.

கிட்டு :—என் மனைவி முழுப்பானை சோற்றை அப்படியே விழுங்கி விடுகிறளப்பா. இதற்கென்ன செய்யலாம் ?

ஆமாவடைமுதலியார் :—இது விவாஹத்திற்கு முன்பே தெரிந்திருந்தால் வேறு மனைவியையாகிலும் பார்த்திருக்கலாம். இப்பொழுது என்ன செய்கிறது ?

* * *

பிரசங்கி :—என்னையா ! ஏதாவது புதினம் உண்டா ?

நண்பர் :—நரபலி கேட்ட பேயை கடைசியில் தேத்தண்ணியோடு பூசாரி ஒட்டிவிட்டான். இதுதான் எனக்கு ரொம்ப ஆச்சர்யமாயிருக்கிறது.

பிரசங்கி :—அவன் முட்டாள். குண்டாந்தடியோடு அந்தப் பேயை ஓட்டியிருக்கலாம். இதுமாதிரிதான் நானும் யாழ்ப்பாணத்தில் பேயை ஒட்டினேன்

* * * *

இங்கும் அங்கும்.

(பிரஸங்கி திரட்டியது.)

"டிராமா ஏற்பட்ட காரணம் போய் அது ஊரை தொலைக்கலானல் போல் பலதும் ஒரு நல்லகாரியத்தின்பொருட்டே துவங்கப்பட்டு பின்னல் இக்கால புண்ணியவான்களால் பெருந்தீமையாய் முடிகிறது." என்று நம் பிரசங்கி சொல்லிக்கொண்டிருக்க தெருவிலே நடந்த கோயில் பெருச்சாளிக்கு கோபம் வந்துவிட்டதாம்.

* * * *

"ருத்திராக்ஷப் பூனைகள் மிகுந்த இக் காலத்தில் உண்மை பக்திமான்களுக்கு மதிப்பில்லையே." என கேட்ட நண்பரை நோக்கி, "அதை கண்ணுர தேர்தல் காலங்களில் கண்டு பின்னர் அதற்கு சரியானபடி பதில் கொடுப்பதாய்" பிரசங்கி தெரிவித்துக்கொண்டாராம்.

* * * *

" சாமியுமில்லை, பூதமுமில்லை என்று அதனப்பிரசங்கம் செய்துகொண்டிருந்த அன்பரை தாழ்ப்பாளின் கீழிருந்த கொடுக்கன் சாமி மிகவும் கருணைகூர்ந்து கடாக்ஷித்து அவருடைய இவ்வுலகக் கஷ்டத்தை நிவர்த்தித்து தெய்வ நீதியையும் ஸ்தாபித்தாராம்." என பிரசங்கி எச்சரிக்கிறன்.

நீர் இன்னும் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறீரென்பது நன்ருய் வெளியாகிறது. ஆனல் அதைப்பற்றி நான் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. என் மகன் இப்பொழுது எங்கிருக்கிறனென்பது எனக்குத் தெரியாது. நேற்று இரவு $8\frac{1}{4}$ மணி வண்டியில் நானும் அவனும் புதூரிலிருந்து (அவருடைய மகள் இருந்த கிராமம்) வந்தோம். ஆனல் நாங்களிருவரும் ஸ்டேஷனிலேயே பிரிந்துவிட்டோம். பிறகு, இதுவரையில் அவன் வீட்டிற்குத் திரும்பிவரவில்லை. ஆகவே, உங்களைக் கண்டதும் அவனுடைய உயிருக்கே ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டதோவென முதலில் பதறினேன். ஆனல் அப்படியிருக்கும்பக்ஷத்தில் நீங்கள் என்னைக் கண்டதுமே விஷயத்தைச் சொல்லியிருப்பீர்கள். இன்னும், இப்படி என்னை ஏளனமாகவும் அதட்டியும் பேசமாட்டீர். தற்சமயம், உம்முடைய குரலிலிருந்து, என் மகன் ஏதோ செய்யக்கூடாத கார்யத்தைச் செய்துவிட்டதாக நீர் நினைத்து, அவனை ஏற்கனவே கைதுசெய்துவிட்டோ இல்லாவிட்டால் அவனைப் பிடிப்பதற்காகவோ இங்குவந்து என்னை இவ்விதம் பயமுறுத்துகிறீரென்பது நிச்சயம். என்னுடைய பையன் எப்பேர்ப்பட்டவனென்பது என்னைக்காட்டிலும் உமக்குத் தெரிய நியாயமில்லை. அவன் ஒருநாளும் அக்கிரமமான எக் கார்யத்தையும் செய்யமாட்டானென்பது எனக்கு நன்ருய்த் தெரியுமாகையால் இனி எனக்கு அவனைப்பற்றிய கவலையே கிடையாது. சரி; மேலே உமக்கு வேண்டியதை நீர் கேட்டுக்கொள்ளலாம். நான் விடையளிக்கத் தயார்." என்ருர்.

இவ்விதம் நடேச முதலியார் கம்பீரத்துடன் விடையளிக்கவே, குருஸ்வாமி முதலியாருக்குண்டான ஆச்சர்யத்திற்கும் கோபத்திற்கும் அளவில்லை. ஆகவே, அவர் அதிகரித்த அதிகார த்வனியிலும் பரிஹாசமாகவும் பேசவாரம்பித்தார்.

குரு :—ஓஹோ ! ஆனல் உம்முடைய பையன் பரமயோக்கியனென்று நீர் நினைத்துக்கொண்டிருக்கிறீரோ ?

நடே:— நான் அனாவசியமான கேள்விகளுக்கு விடையளிக்கமுடியாது.

குரு:—அப்படியா? உம்முடைய பையன் லேசான காரியம் செய்யவில்லை. ஒரு தட்டுவாணி முண்டையின்மீது தனக்குள்ள மோகத்தினால் அவளை விவாஹம்செய்து கொள்ள ஏற்பாடாயிருந்த மற்றொருவன்மீது பொறாமைகொண்டு அவனைக் கொலைசெய்துவிட்டான்.

'கொலை' என்ற வார்த்தையைக் கேட்டதும் நடேச முதலியார் தன் நாற்காலியிலிருந்து தாவி பூமியில் நின்றார். அவரையறியாமலே அவருடைய கால்கள் நடுங்கவாரம்பித்தன. அவர் அதுவரையில் அவ்வளவு கோரமான சம்பவம் நடந்திருக்குமென்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையாகையால், அவர், ஓங்கி தன் மண்டைமேல் அடிக்கப்பட்டவர்போல் மதிமயங்கி, நிற்கவும் சக்தியற்று, மறுபடியும் தன் நாற்காலியில் விழுந்தார். அவருடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்ட நம் குருமூர்த்தி ஸ்வாமிகளுடைய கண்களில் நீர் தளும்பியது. குருஸ்வாமி முதலியார், முன்பின் யோசியாமல், நம் மரகதவல்லியை "தட்டுவாணி முண்டை" என்று நிந்தித்துப் பேசியதும், ஸ்வாமிகளுடைய முகம் கோபத்தினாலும் வெறுப்பாலும் மாறியது. அச்சமயம், அவர், ஸப்இன்ஸ்பெக்டரைக் கூர்ந்து கடுமையான பார்வையுடன் கவனித்து "ஓய்! உம்முடைய இறுமாப்புக்கும் பதட்டத்துக்கும் நீர் கூடியசீக்கிரம் தண்டனை அடைவீர்." என்று பயமுறுத்துவதுபோலிருந்தது. பிறகு, ஸ்வாமிகள், நாம் சொன்னவிதம் நடேச முதலியாருடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு மனம் உருக, கண்களில் நீர் தளும்ப அநுதாபத்துடன் எழுந்து, நடேச முதலியாரை யணுகி அவருடைய கரங்களைப் பிரியத்துடன் பற்றிக்கொண்டு,

"ஐயா! நீர் வீணில் கவலைப்படவேண்டாம். என்னை நம்பி தைரியமாயிரும்." என்று கூறவே, நடேச முதலியார், திகைப்புற்று, அவருடைய முகத்தை உற்றுநோக்கினார்.

அச்சமயம், ஸ்வாமிகளுடைய முகத்தில் காணப்பட்ட ஒரு பெருந்தன்மையும், அவருடைய கண்களில் ஜ்வலித்த ஒரு பார்வையும் "ஐயா! அப்படியே உம்முடைய பையன் இவரால் கைது செய்யப்பட்டபோதிலும், அவனை நிரபராதியென்று ரூபித்து நான் காப்பாற்றுவேன்." என்று வாக்களிப்பதுபோலிருந்தது. அவருடைய முகத்தைப் பார்க்கப் பார்க்க, நடேச முதலியாருக்குக் கொஞ்சம் தைர்யமும் சமாதானமும் ஏற்பட்டன. இவ்விதம் ஏதோ காந்தசக்தியினால் இழுக்கப்பட்டவர்போல், அவர் கொஞ்சநேரம் ஆவலுடன் ஸ்வாமிகளுடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தார். பிறகு, "சரி; இப்பொழுது கொலைசெய்யப்பட்டிருப்பது மைனர் கோவிந்தசாமி யென்பதும், அவனைக் கொலைசெய்தது என் மகனென்றும் இவர் கூறுகிறார். எறும்பையும் ஹிம்ஸிக்க சகிக்காத என் மகன் ஒருநாளும் இக்கொலையைச் செய்திருக்கமாட்டான். 'தட்டுவாணி முண்டை' என்று இவர் கூறியது டாக்டர் கேசவ முதலியாருடைய மகள் மரகதவல்லி யென்பது நிச்சயம்." என்று நினைக்கும்பொழுதே அவருடைய கண்களில் கோபாக்கினி ஜ்வலித்தது. உடனே ரௌத்திராகாரத்துடன் குருஸ்வாமி முதலியாரை நோக்கி,

"ஐயா! என் மகன் எந்தப் பெண்மீது மோகித்து இப்படிச் செய்தானென்று உமக்குத் தெரியுமா?" என்று வினவ, குருஸ்வாமி முதலியார், கன அலக்ஷியமாய்,

"ஆஹா! நன்றாய்த் தெரியும். அவளுடைய விவாஹம் இன்றே நடக்கவேண்டியது. அதற்கு அழைப்புப் பத்திரம் எனக்கும் வந்திருக்கிறது." என்று விடையளித்தார். நடேச முதலியார்,

"ஆனால் அவள் யாரென்பது தெரிந்துதான் நீர் அவளைத் 'தட்டுவாணி முண்டை' என்று இகழ்ந்து பேசினீரோ?" என்றார்.

அதுவரையில், குருஸ்வாமி முதலியார் தான் பதட்டமாய்ப் பேசிவிட்டதை உணரவில்லை. அவர், உடனே தன்

அசட்டுத்தனத்தை அறிந்துகொண்டு விடையளிக்காமல் இருந்தார். ஆனால் அவர் தான் அப்படிப் பேசியது பிசகென்று ஒப்புக்கொள்ள இஷ்டப்பட்டவராய்க் காணப்படவில்லை. ஆகவே, நடேச முதலியார், அதிகரிக்கும் கோபாவேசத்துடன்,

"குருஸ்வாமி முதலியார்வாள்! நீர் போலீஸ் உத்தியோகஸ்தர் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் உம்முடைய அதிகாரத்திற்கு ஒரு அளவுண்டு. கொஞ்சம் வார்த்தைகளை யோசித்துப் பேசும். என் நண்பர் கேசவ முதலியாருடைய மகள் மரகதவல்லியைப் போன்ற பெண் திலகம் கிடைப்பதரிதென்று அவளைப் பார்த்த ஒவ்வொருவரும் தயக்கமின்றி ஒப்புக்கொள்ளுவார்கள். நற்குணங்களும் அழகும் ஒன்றுசேர்ந்து அவதாரமோவென்று எண்ணத்தக்க அக் குழந்தையை நீர் இவ்விதம் 'தட்டுவாணி முண்டை' என்று கூறியதை, கேசவ முதலியார் அறிவாரானால் உம்முடைய கதி யென்னவாகுமென்பது தெய்வத்துக்குத்தான் தெரியும். ஓய்! உலகத்தில், ஒருவனுடைய பெண் தட்டுவாணியாயிருக்கிறாளென்ற காரணத்தால் அவன் அவ்வுலகத்திலுள்ள பாக்கி யெல்லாப் பெண்மணிகளும் அப்படியே யென்று நினைப்பானாகில் அவனைப்போன்ற மூடாத்மா ஒருவனுமிருக்கமாட்டான்." என்று ஆத்திரத்துடன் பேசவே, சபேசய்யர், அவருடைய கோபத்தைக் கண்டு, காரியம் மிஞ்சிவிடுமென்று பயந்தும், குருஸ்வாமி முதலியார் அவ்விதம் பேசியது பிசகென்பதையுணர்ந்தும், உடனே குறுக்கிட்டு நடேச முதலியாரை சமாதானப்படுத்தவே, அவர் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தன் கோபத்தை அடக்கிக்கொண்டார். பிறகு, குருஸ்வாமி முதலியார் நடேச முதலியாரை மேலும் பல அனாவசியமான கேள்விகளைக் கேட்கவாரம்பித்தார்.

ஆனால் சபேசய்யர் அதைச் சிறிதும் கவனிக்கவில்லை. அவருக்கு குருஸ்வாமி முதலியார் வீணில் துள்ளுகிறாரென்று எண்ணமாகையால், அவர் அக் கேஸில் என்னதான்

செய்கிறாரென்று பார்க்க நிச்சயித்து, தான் அதில் கொஞ்சமும் சம்பந்தப்படாமலிருந்தார். ஆனால் அவர் அவ்வறைக்குள் நுழைந்தது முதற்கொண்டு அவருடைய கண்கள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன. அதுவும் சென்ற சிலநிமிஷ நேரமாக, அவர் பக்கத்திலிருந்த ஒரு கண்ணாடி பீரோவைக் கூர்ந்து கவனித்தவண்ணமிருந்தார். வரவர, அவருடைய முகம் ஆச்சர்யத்தினால் மாறியது. அவர்; "சரி; இப் பையனே இக் கொலையைச் செய்தானென்பதைக் காண்பிக்க, இதே அறையில் மற்றொரு சாக்ஷியுமிருக்கிறது. இருக்கட்டும். இவ்வளவு தூரம் துள்ளுகிற முதலியார் அதைக் கண்டுபிடிக்கிறாரா இல்லையா வென்று பார்ப்போம்." என்று சும்மாயிருந்துவிட்டார். ஆனால் அவர் அவ்விதம் அந்த கண்ணாடி பீரோவை இமைகொட்டாமல் கவனித்ததையும் அவருடைய முகம் மாறியதையும் நம் குருஸ்வாமி முதலியார் பார்த்துவிட்டார். அவர், உடனே அந்த பீரோவில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்று நினைத்து, அதைத் தானே முதலில் கண்டுபிடித்த கியாதியை யடையும்பொருட்டு, ஒரே தாவலாய்த் தாவி, அந்த பீரோவின் முன்பு நின்றுகொண்டு, கன அட்டஹாஸத்துடன் நடேச முதலியாரைப் பார்த்து,

"ஓய்! உடனே இதைத் திறவும்." என்று கட்டளையிட்டார்.

அவருடைய அகம்பாவத்தையும் நீச சுபாவத்தையும் கண்ட நடேச முதலியார், அப்படியே வந்ததுவரட்டுமென்று, அவருடைய கன்னங்களில் சில அறை கொடுக்கலாமாவென்று யோசித்தார். ஆனாலும், அச்சமயம் தான் வீண்வம்பு செய்வது பிசகென்று நினைத்து, வாயைத் திறக்காமல், பீரோவைத் திறந்துவிட்டார். உடனே, நம் குருஸ்வாமி முதலியார், சிறிதும் தயங்காமல், அதற்குள்ளிருந்த விலையுயர்ந்த துணிமணிகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் ஒவ்வொன்றாய் எடுத்து தரையில் எறிந்தார். இவ்விதம் 5நிமிஷ நேரத்திற்குள் பீரோவைக் காலிசெய்துவிட்டு,

தனக்கு உபயோகமுள்ள சாமான் ஒன்றுமில்லாததைக் கண்டு, ஆவலுடன் சபேசய்யரை உற்றுநோக்கியவண்ணம்,

"என் ஸ்வாமி! இதில் ஒன்றுமில்லையே." என்று வினவினார். சபேசய்யர், 'அடமண்டூவே!' என்று பரிஹஸிப்பதுபோல், புன்முறுவல்செய்து,

"அதில் எதுவுமிருப்பதாக நான் சொல்லவில்லையே." என்றார். குருஸ்வாமி முதலியார் ஒன்றும் புரியாமல் அஜம்போல் விழித்தார். பிறகு,

"ஆனால் எதற்காக, அப்படி 5நிமிஷ நேரம்வரையில் இமைகொட்டாமல், இந்த பீரோவைக் கவனித்துக்கொண்டிருந்தீர்?" என்று வினவினார். சபேசய்யர்,

"ஆனால் நீர் இதைச் சோதனை செய்ததற்குக் காரணம் நான் இதைக் கவனித்தேனென்பதுதானோ? சரி; தொலையட்டும். ஆனால் இதில் நமக்கு உதவக்கூடிய வஸ்து ஒன்றுமில்லையென்று நீர் சொல்லுகிறீர்?" என்று கேட்க குருஸ்வாமி முதலியார், திகைப்புற்று, அப்படியே தரையில் விழுந்து பீரோவின் கீழே கவனித்தார். அங்கு ஒன்றுமில்லையெனக் கண்டு, ஒரே தாவலாய்த் தாவி, பீரோவின் படிகளில் காலைவைத்து, ஏறி, மேலே கவனித்தார். அங்கும் ஒன்றுமில்லையாகையால், கீழே குதித்து, பக்கத்திலிருந்த குருமூர்த்தி ஸ்வாமிகளைக் கவனித்தார். அச்சமயம் நம் ஸ்வாமிகளுடைய கண்களில் விஷமும் பரிஹாஸமும் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அவைகள், "ஓய்! நீரும் ஒரு போலீஸ்காரனா? நீர்தானா வாஸ்தவத்தில் கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்கப்போகிறீர்?" என்று கேட்பது போலிருந்தன. முதலியார், ஒன்றும் புரியாமல், மறுபடியும் சபேசய்யரை நோக்கவே, சபேசய்யர்,

"முதலியார்வாள்! அதோ பாரும்." என்று தன் ஆள்காட்டி விரலால் அப் பீரோவின் ஒரு பாகத்தைக் காண்பித்தார். குருஸ்வாமி முதலியார், அதுவரையில் அப் பீரோவின் தட்டுக்களையெல்லாம் கவனித்தாரேயொழிய, அதன்

பக்கங்களிலிருந்த பலகைகளைக் கவனிக்கவேண்டுமென்பது அவருடைய மூளையில் படவில்லை. அதில் வலதுபக்கத்தில் இரண்டாவது தட்டிற்கும் மூன்றாவது தட்டிற்குமிடையிலிருந்த பலகையில் அடிக்கப்பட்டிருந்த சிறுபித்தளை ஆணிகளிலிருந்து, வரிசைக்கு நாலாக, 8 தோல் பைகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளின்மேல் 1, 2 என்ற ஒரு நம்பர் வெள்ளை வர்ணத்தினால் எழுதப்பட்டிருந்தது. அவைகளைக் கண்டதும் நம் குருஸ்வாமி முதலியார் குபீரென்று பாய்ந்து, அவைகளை யெடுத்து ஒவ்வொன்றாகக் கவனித்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் அழகிய நீண்ட கத்தியொன்று இருக்கவே, குருஸ்வாமி முதலியாருக்குண்டான சந்தோஷம் அளவற்றது. அவர், உடனே நடேச முதலியாரைப் பார்த்து,

"ஓய்! நீங்கள் வெளியில் போகும்பொழுதெல்லாம் கையில் கத்தியில்லாமல் போவதில்லையோ?" என்று வினவ, நடேச முதலியார்,

"இவைகள் எங்களிடம் பரம்பரை பரம்பரையாக இருந்துவருகின்றன. இதை நான் அழகின்பொருட்டு வைத்துக்கொண்டிருக்கிறேனே யொழிய உபயோகப்படுத்துவதே இல்லை." என்று விடையளித்தார். இதற்குள், குருஸ்வாமி முதலியார், எல்லாப் பைகளையும் பார்த்துவிட்டு,

"சரி; இவைகள் எல்லாவற்றிலும் கத்திகளிருக்கின்றனவா?" என்று வினவ,

"இருக்கிறது." என்று நடேச முதலியார் விடையளித்தார்.

"இதோ இது காலியாயிருக்கிறதே?" என்று கூறியவண்ணம், குருஸ்வாமி முதலியார் ஒரு பையை நீட்டினார். அதில் '7' என்ற நம்பர் எழுதப்பட்டிருந்தது. பிறகு அவர், கொலை நடந்தயிடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட கத்தியை தன் சட்டைப்பையிலிருந்து எடுத்துக் காண்பித்து,

"இது உம்முடையதா பாரும்." என்றார்.

இரத்தம் தோய்ந்த அக் கத்தியைக் கண்டதும், நடேச முதலியார் மறுபடியும் திடுக்கிட்டு, முகம் வெளுத்து, உள்ளம் பதற, ஸ்தம்பித்து நின்றார். ஆனால், குருஸ்வாமி முதலியார், அவருடைய நிலைமையை சிறிதும் லக்ஷியம் செய்யாமல்,

“ என்ன ஐயா ! வாயில் கொழுக்கட்டையா ? இது உம்முடையதுதானா சொல்லுமே.” என்று அதட்டவே, நடேச முதலியார் ‘ ஆம் ’ என்பதற்கடையாளமாக தன் தலையை ஆட்டினார்.

அதே சமயம் அவ் வீட்டிற்குள் யாரோ சிலர் அவசரத்துடன் வரும் தடதடவென்ற சப்தம் கேட்கவே, எல்லோரும் வெளிப்பக்கம் திரும்பினார்கள். மறுநிமிஷம், இரு போலீஸ்காரர்கள் நம் ராமானுஜத்தைக் கட்டி இழுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர்.

அக் காக்ஷியைக் கண்டதும், நடேச முதலியார் ‘ஐயோ !’ என்று வீரிட்டலறி வெட்டுப்பட்ட மரம்போல் தரையில் விழுந்து மூர்ச்சையானார்.

அத்தியாயம் 13.

அதே தினம் மாலை 6 மணியிருக்கும்.

அச்சமயம், வக்கீல் புருஷோத்தம செட்டியாருடைய குமாஸ்தா முத்துராமன் என்ன செய்துகொண்டிருந்தானென்பதைக் கவனிப்போம். அவன் தன் வீட்டில் ஒரு படுக்கையில் சுயநினைவற்றவன்போல் நிம்மதியற்று அப்படியும் இப்படியும் புரண்டவண்ணமிருந்தான். அவனுடைய பக்கத்தில் வயது முதிர்ந்த அவனுடைய தாயார் உட்கார்ந்துகொண்டு, நிமிஷத்திற்கு ஒருதரம் அவனுடைய சரீரத்தைத் தொட்டுப்பார்ப்பதும், கவலையினால் வாயில் வந்தபடி புலம்புவதுமாயிருந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே வந்த அவளுடைய தோழி தருமிப்பாட்டி,

“ ஏண்டி சுப்பு ! அவனுக்கென்னடி ஒடம்பு ? இப்பத்தான் கொந்தளத்தும் நாட்டுப்பொண் சிவகாமு, சுப்புப் பாட்டி சின்னப்புள்ளேக்கி ஒடம்பு ரொம்ப ஜாஸ்தியாயிருக்காம்னு சொன்னாள். உடனே ஓடிவந்தேன். அவனுக்கென்ன பண்ரது ? யாருகிட்டயானும் காண்பிச்சயா ? ” என்று அநுதாபமொழுக வினவ, சுப்புப்பாட்டி, தன் கைகளை விரித்து,

“ அடி தருமி ! அதை யேண்டீ கேக்கரே ? நமக்கு மொதல் புள்ளெதான் ஒட்டாமே போயிடுத்தே ; இதுவானும் கொஞ்சம் இதமாயிருக்கும்னு நெனச்சேன். இதைக் கட்டேலே வைக்க ; ரெண்டு மூணு நாளா வேளாவேளெக்கி கொட்டிக்கவரதில்லே. ஊரெல்லாம் சுத்தரான் ; நேத்தி ராத்திரி ஒருமணியிருக்கும் ; வந்து ‘ அம்மா ! அம்மா ! ’ ன்னு கூப்பிட்டான். ஓடிக் கதவெத் தொறந்தேன். கொழுந்தே அதுக்குள்ளே நிக்கமுடியாமே அப்படியே திண்ணேலே படுத்துனுட்டான். நான் கிட்டப்போய் தொட்டதும் என்னமோ பிசாசு தொரத்திண்டு வராப்லே உள்ளே ஓடி குப்ரப்படுத்துனுட்டான். கூப்டக்கூப்ட ஏன்னுகேக்லே. நடுராத்திரிலே என்ன பண்ணரதுன்னு சும்மாயிருந்துட்டேன். பொழுது விடிஞ்சதும் டாகுடர் சாம்பசிவய்யரே அழெச்சுண்டுவந்து காம்பிச்சேன். அப்போ ஜொரம் கனவேகமா அடிச்சிண்டிருந்தது. அவர் ஏதோ பயந்திண்டிருக்கான் ; அதல்லாம் ஒண்ணுமில்லேன்னு சொல்லிபிட்டு என்னமோ ஒரு புட்டியில் மருந்து கொடுத்தனுப்பினார். உடனே அதைக் கொடுத்தேன். இதுவரெலே கண்ணைத் தறக்கலே. இப்பத்தான் கொஞ்சம் ஜொரம் தணிஞ்சிருக்கு. ஒரு கிண்ணி ரஸம்சாதம் குடிச்சான். எங்கொழந்தயே அந்த அகிலாண்டேசுவரிதான் காப்பாத்தணும். ரெண்டு வெள்ளிக்கிழமே நெய்வெளக்கு ஏத்தரேன்னு வேண்டிக்கிண்டிருக்கேன். நான் இன்னும் என்னடீ செய்வேன் ? ” என்று மிகவும் பரிதாபமாகக் கூறிமுடித்துவிட்டு, தன் பிள்ளையைத் தொட்டு, “ அப்பா ! முத்து ! முத்து ! ஏண்டிம்மா ! என்ன பண்ரது ?” என்று கேட்டாள்.

இதற்குள் முத்துராமன், கொஞ்சம் களைதீர்ந்தவன் போல், பெருமூச்செறிந்தவண்ணம் தன் கண்களைத் திறந்து, ஏதோ சில சம்பவங்களைத் தன் ஞாபகத்திற்குக் கொண்டுவரப் பிரயத்தனப்படுபவன்போல் காணப்பட்டான். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம், அவ்வீட்டிற்குள் யாரோ அவசரத்துடன் வரும் சப்தம் கேட்கவே, அச்சிறுவன், மெல்ல எழுந்துட்கார்ந்துகொண்டு, வெளிப்பக்கம் நோக்கியவண்ணமிருந்தான். மறுநிமிஷம் நம் பாலகிருஷ்ணன் அங்கு வரவே, தாழ்ந்த குரலில்,

"யார்? செட்டியார்வாளா? வாருங்கள்; வாருங்கள்." என்று தன் பக்கத்திலுட்காரும்படி ஜாடைசெய்தான். பாலகிருஷ்ணனும், அவனுடைய நிலைமையைக்கண்டு ஆச்சர்யப்பட்டவனாய், உட்கார்ந்துகொண்டு,

"அடபாபமே! உமக்கென்ன உடம்பு?" என்று விசாரிக்க, முத்துராமன், அலக்ஷியமாய்,

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அதிருக்கட்டும்; ஊரில் என்ன விசேஷம்? நீர் எப்பொழுது வந்தீர்?" என்று அடக்க இயலாத ஆவலுடன் கேட்டான். பாலகிருஷ்ணன்,

"நான் இன்றுதான் வந்தேன். ஆமாம்; மைனர் கோவிந்தசாமி கொலைசெய்யப்பட்ட விஷயம் உமக்குத் தெரியுமோ?" என்று வினவ, முத்துராமன்,

"தெரியும். சரி; பிறகு என்ன நடந்தது?" என்று விசாரித்தான். பாலகிருஷ்ணன், முகவாட்டத்துடன்,

"அவனைக் கொலைசெய்ததாக என் நண்பன் ராமானுஜத்தைக் கைது செய்திருக்கிறார்கள். இவ்விஷயத்தைப்—" என்று மேலே பேசுமுன், முத்துராமன்,

"என்ன? ராமானுஜ முதலியாரையா கைது செய்திருக்கிறார்கள்? சரி; நாம் உடனே சென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யரைப் பார்க்கவேண்டும்." என்று பரபரப்புடன் கூறிக்கொண்டே, ஓரே தாவலாய்த் தாவி, பாலகிருஷ்ணனுடைய கரங்களைப்பற்றி அவனை யிழுத்துக்

கொண்டு, திடீரென்று ஆவேசங்கொண்டவன்போல், சப்புப்பாட்டியும் தருமிப்பாட்டியும் பிரமித்துத் தடுப்பதையும் கவனிக்காமல், வெளியே ஓடினான்.

அதே சமயம், நம் இன்ஸ்பெக்டர் சபேசய்யர் என்ன செய்துகொண்டிருந்தாரென்பதைக் கவனிப்போம். அவர், தன் வீட்டில், காமாக்ஷிபுரம் துப்பறியும் ஈச்வரதாஸுடன் மிகவும் ஊக்கத்துடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்தது நாகலிங்க நாடானைப் பற்றியேயொழிய வேறல்ல.

ஈசுவரதாஸ் :—சபேசய்யர்வாள்! இதென்ன வெட்கக்கேடு? இந்த நாகலிங்க நாடான் செய்வதை நினைக்க நினைக்க என்னால் பொறுக்கமுடியவில்லையே.

சபேசய்யர் :—வாஸ்தவம். ஆனால் அதற்கு நாமென்ன செய்யலாம்? அவன் லேசான பேர்வழியல்ல. அதுவுமன்றி, அவன் ஏழைகளையும் யோக்கியர்களையும் ஹிம்ஸிப்பதாய்த் தோன்றவில்லை. ஆமாம்; நீங்கள் அவனுடைய புகைப்படமொன்று அனுப்பினீர்களே. அதைப் பார்த்தும், வக்கீல் ராமஸ்வாமி அய்யருடைய வீட்டில் என்னால் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே.

தாஸ் :—ஸ்வாமி! அவன் மாறுவேஷமணிந்துகொண்டு விட்டால் அவனைக் கண்டுபிடிப்பது முடியாத காரியம். இன்னும் அவன் தன்னிஷ்டப்படி தன் குரலையும் மாற்றிக்கொண்டுவிடுகிறான். ஏன்? இதுவரையில் நான் அவனுடன் பலதரம் நேரில் கண்டு பேசியிருக்கிறேன். ஆனால் அது நாகலிங்க நாடானென்பதுஎனக்கு அப்பொழுது தெரியவில்லை. பிறகுதான் தெரிந்தது.

சபே :—ஆமாம்; அவன் வக்கீல் ராமஸ்வாமி அய்யருடைய வீட்டில் செய்த வேலையைப் பார்த்தால், அவனைச் சேர்ந்தவர்கள் பலர் இருப்பார்கள்போலிருக்கிறதே?

தாஸ் :—அதையேன் கேட்கிறீர்கள்? அவனுடைய மனுஷ்யன் இல்லாத இடமில்லை. அவர்கள் இப்பொழுது நாம் பேசுவதையும் கவனித்துக்கொண்டிருப்பார்கள். இன்னும், அவனைச் சேர்ந்தவர்களெல்லோரும் நன்றாய்ப் படித்தவர்கள்.

சபே :—அப்படித்தான் தோன்றுகிறது. அன்று ராமஸ்வாமி அய்யர் வீட்டில் அவன் ஆங்கிலேய பாஷையில் என்னுடன் பேசியதைக் கண்டு நானே பிரமித்துவிட்டேன். வீணில் புலம்புவதில் என்ன பிரயோஜனம்? அன்று, என் ஆசாமி, அவனும் ராமலிங்கமும் கண்டு பேசியதைப் பார்த்தபொழுதே, முன் யோசனையுடனிருந்திருக்கவேண்டும். ஆனால் அவனுக்கு நாகலிங்க நாடான் எப்பேர்ப்பட்டவனென்பது தெரியாது. என்ன ஆச்சர்யம்? நான் மறுநாட் காலை அவ்வீட்டிற்குச் சென்று பார்ப்பதற்குள் மாயமாய்ப் போய்விட்டானே. அவன் இந்த இரண்டு மூன்று மாதங்களில் இவ்வூரில இரண்டு லக்ஷத்துக்குமேல் கொள்ளையடித்திருக்கிறான். இவ்வளவு பணத்தையும் அவன் என்ன செய்கிறானோ தெரியவில்லையே?

தாஸ்:—அடாடா! அது உங்களுக்குத் தெரியாதோ? அவன் திருடனாயிருந்தபோதிலும் மகா தர்மிஷ்டன். காமாக்ஷிபுரத்தில் அவனால் காப்பாற்றப்பட்டு, அவனைத் தங்களுடைய குலதெய்வமென்று மதித்துவரும் குடும்பங்கள் பலவுண்டு. அவனுடைய பெயரைக் கேட்டதும் பணமமதைகொண்டு அக்கிரமம் செய்யும் பணக்காரர்களுக்குத்தான் நடுக்கமேயொழிய, ஏழை ஜனங்கள் அவனால் மிகவும் லாபமடைகிறார்கள்.

சபே : அது எப்படியிருந்தாலென்ன? நாமென்னமோ பிராணனைவிட வேண்டியிருக்கிறது. பாருமே; இன்று ஒரு கொலை நடந்திருக்கிறது.

தாஸ்:—ஆமாம்; மறந்துவிட்டேனே. ஸப் இன்ஸ்பெக்டர் குருஸ்வாமி முதலியார் மிகவும் துள்ளுகிறாரே?

சபே :—அது ஒரு பைத்தியம். இந்தக் கேஸில் அவர் கண்டிப்பாய் அவமானப்படப்போகிறார். இன்னும், முன்பின் யோசியாமல் எல்லோரையும் கண்டபடி பேசும் வழக்கமும் அவரிடமிருக்கிறது. இன்று காலமே, அந்த நடேச முதலியாரிடம் அவர் அடிவாங்குவார்போலிருந்தது.

தாஸ்:—ஆனால் அவர் தற்சமயம் கைது செய்திருக்கும் பையன் குற்றவாளியல்லவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

சபே :—எனக்கென்னமோ சந்தேகமாகத்தானிருக்கிறது. அந்தப் பையனைப் பார்த்தால் இப்பேர்ப்பட்ட காரியம் செய்வானென்று தோன்றவில்லை.

அச்சமயம், ஒரு போலீஸ்காரன் அங்கு வந்து, சபேசய்யரை நோக்கி அவரை உடனே பார்க்கும்பொருட்டு இருவர் வந்திருப்பதாய்க் கூறவே, சபேசய்யர் அவர்களை உள்ளே அழைத்துவரும்படி கட்டளையிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம், நம் பாலகிருஷ்ணனும் குமாஸ்தா முத்துராமனும் உள்ளே வந்தனர்.

* * * *

நிற்க, அதே இரவு 9 மணி சுமாருக்கு, ஸப் இன்ஸ்பெக்டர் குருஸ்வாமி முதலியார் என்ன செய்துகொண்டிருந்தாரென்பதையும் கவனிப்போம். அவர் தன் அறையில் தன் துணிமணிகளைக் களைந்துகொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்துசேர்ந்த அவருடைய மனைவி,

“ஏன் இவ்வளவு நாழி? ஸ்வாமி தர்சனத்துக்குப் போக அகாலமாகிறதே?” என்று கூறவே, முதலியார்,

“ஆமாம்; ரொம்ப நாழியாய்விட்டது. இன்று போக வேண்டாம்.” என்றார்.

அவருடைய மனைவிக்குக் கிட்டத்தட்ட 30 வயதிருக்கும். அவளுடைய சரீரத்தில் பல வைரநகைகள் ஜ்வலித்

துக்கொண்டிருந்தன. தினந்தோறும் நம் முதலியார் தன் மனைவியுடன் அவ்வூருக்கு 2 மைல் தூரத்திலிருந்த ஒரு சுப்ரமண்யஸ்வாமி கோயிலுக்குச் சென்று தர்சனம்செய்துவிட்டுவந்துதான் சாப்பிடுவது வழக்கம். அப்பக்கம் எல்லோரும் இருட்டியபிறகு மனந்துணிந்து போவதில்லை. ஆனால், முதலியார் தான் போலீஸ் உத்தியோகஸ்தர் என்ற தைரியத்தினால் அங்கு அகாலங்களிலும் போவதுண்டு. அன்று போகவேண்டாமென்று அவர் கூறியதும், அவருடைய மனைவி,

"ரொம்ப நன்றாயிருக்கிறதே. இன்று கார்த்திகை சோமவாரம். இன்று தர்சனம் செய்யாமல் சாப்பிடலாமோ? இவ்வளவு காலமாய் போலீஸில் உத்தியோகம் பார்த்துவிட்டு, அகாலமென்று சொல்ல வெட்கமாயில்லையே." என்று பரிஹஸிக்கவே, முதலியார், அசட்டுச் சிரிப்புச் சிரித்து,

"ஏண்டி! நான் அகாலமென்று சொன்னால் பயப்படுகிறேனென்று அர்த்தமா? சரி; புறப்படு, போவோம். ஆமாம்; இப்பொழுது வேறு வண்டியல்லவோ பிடிக்கவேண்டும்?" என்று வினவினார்.

"இல்லை. வழக்கம்போல் வண்டிக்காரன் 8மணிக்கு வந்தான். நீங்கள் வீட்டிலில்லாததால் 9மணிக்கு வரச்சொல்லியிருக்கிறேன். நீங்கள் உடம்பை சுத்தம் செய்துகொள்ளுங்கள். அதற்குள் வந்துவிடுவான்." என்று அவருடைய மனைவி சொல்லவே, முதலியார் கொல்லைப்பக்கம் சென்றார்.

இங்கு அவ் வண்டி விஷயமென்னவென்பதையும் சொல்லிவிடுவோம். முதலியார் சுவாமி தர்சனம் செய்யும்பொருட்டு, தினந்தோறும் இரவு 8மணிக்கு, ஒரு ஜட்கா வண்டி வருவது வழக்கம். அவ் வண்டிக்காரனுக்கு நம் முதலியார் வாடகை கொடுப்பதில்லையென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவருடைய மனைவி கூறியது போலவே, முதலியார் தயாராகுமுன் வண்டியும் வந்து சேர்ந்தது. உடனே புருஷனும் பெண்ஜாதியுந் தங்களு

டைய மகளையும் வேலைக்காரியையும் அழைத்து, வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள். அவர்களுடைய புதல்விக்கு சுமார் 15 வயதிருக்கும். அவளைப் பார்த்ததுமே, எவனும் அவளை விவாஹம் செய்துகொள்ள அஞ்சுவானென்பதுடன் அவளுடைய ரூபலாவண்யத்தின் வர்ணனையை நிறுத்திக்கொள்ளுவோம்.

நிற்க, முதலியாரும் அவருடைய மனைவியும், வெளியே சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த வண்டியிலேறும்பொழுது, எதிர்திசையிலிருந்து வந்துகொண்டிருந்த ஒருவன் தும்பவே, முதலியார், கோபத்துடன்,

"யாரடா அது? மட்டிநாயே! வண்டி புறப்படும்பொழுது தும்புகிறாயே. உனக்கு மூளையில்லை?" என்று அதட்டிவிட்டு, தன் வீட்டுத் திண்ணையில் நின்றுகொண்டிருந்த இரு போலீஸ் சேவகர்களில் ஒருவனை நோக்கி, "அடே! அந்த போக்கிரிநாயை இங்கே இழுத்துக்கொண்டு வா." என்று கட்டளையிட்டார். உடனே அப் போலீஸ்காரன் ஓடி தும்பியவனை இழுத்துவந்து முதலியார்முன் நிறுத்தினான். முதலியார்,

"ஏண்டா! காமாட்டி படுவா! வண்டியிலேறும்பொழுது தும்புவது அபசகுனமென்பது உனக்குத் தெரியாதா?" என்று மிரட்டவே, தும்பியவன், அவர் போலீஸ் இன்ஸ்பெக்டரென்பதை அறிந்தவனாகையால், நடுநடுங்கி, வாய்குளற,

"யசமான் மன்னிக்கவேண்டும். யசமான் வண்டியில் ஏறுவதை நான் பார்க்கவில்—" என்று மேலே பேசுமுன், முதலியார்,

"சீச்சி! அயோக்கியக் கழுதை! உனக்குக் கண்ணில்லை?" என்று சொல்லிக்கொண்டே, அவனுடைய கன்னத்தில் பளீரென்று ஒரு அறை கொடுத்துவிட்டு, வண்டியிலேறி உட்கார்ந்துகொண்டு, அதை ஓட்டும்படி வண்டிக்காரனை ஆக்ஞாபிக்கவே, வண்டியும் உடனே புறப்பட்டது.

பிறகு, அவர் அவ்விதம் தும்பியவனைக் கண்டபடி திட்டியதையும் அடித்ததையும் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் மறைவில் நின்று கவனித்துக்கொண்டுவந்த ஒருவன், "என்ன அநியாயம்? சரி; இருக்கட்டும். இப்பாவி அவனை ஒரு கன்னத்தில் அடித்ததற்கு இவனுடைய இரண்டு கன்னங்களும் வீங்கும்படி அடிக்கவேண்டும்." என்று தன்னுள் தீர்மானித்துக்கொண்டு, வண்டி புறப்பட்டதும், முதலியார் தன்னைக் கவனிக்கவகையின்றி, அதைப் பின்தொடர்ந்தான்.

அப்பொழுது, காற்று ஆரவாரத்துடன் அடித்துக்கொண்டிருந்ததுமன்றி, ஆகாயத்தில் பெரிய கருமேகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. வண்டி கொஞ்சதூரம் செல்வதற்குள் பிசுபிசுவென்று மழையும் வந்துவிட்டது. இதைக் கண்ட முதலியார், "என்ன இழவு இது? வண்டியிலேறும்பொழுது அந்தப் பயல் தும்பினான். இப்பொழுது மழை வருகிறது. நான் கையில் கைத்துப்பாக்கியையும் கொண்டுவரவில்லையே." என்று சிந்தித்தார். ஆனாலும் தன்னுடைய அதைர்யத்தை வெளிக்காட்டிக்கொள்ள இஷ்டமில்லாமல் சும்மாயிருந்துவிட்டார். வரவர மழையும் அதிகரித்தது.

இவ்விதம் வண்டி பாதி தூரம் போய்விட்டது. அந்த இடம் நிர்மானுஷ்யமாய் சிறிதும் சப்தமின்றி பயங்கரமாயிருந்தது. சாலையின் இருபக்கங்களிலும் பெரிய மரங்களும் அவைகளுக்குக்கப்பால் இருளடர்ந்த தோப்புகளுமிருந்தன. இதற்குள் மழை "ஹோ" வென்று கொட்டவாரம்பித்துவிட்டது. வரவர, நம் முதலியாருடைய மனதில் பயமும் கவலையும் தோன்றி, அவரை வதைக்கலுற்றன.

இச்சமயம், பக்கத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து, திடீரென்று சுமார் 20 முரட்டு மனிதர்கள் தோன்றி, அவ்வண்டியை வளைத்துக்கொண்டனர். அவர்களில் ஒருவன், மிகவும் கம்பீரத்துடன் நம் முதலியாரை அணுகி,

"ஓய்! உங்களில் யாராவது கூச்சலிட்டால் உடனே உயிர் போய்விடும்." என்றான்.

ஆனால் அவன் அவ்வார்த்தைகளை உபயோகிக்க அவசியமேயில்லாமலிருந்தது. ஏனென்றால், நம் முதலியார் அப்படியே பிரமித்து, தன் வாயைத் திறக்கவும் சக்தியற்று, சிலைபோலுட்கார்ந்துகொண்டிருந்தார். அவருடைய மனைவி பயத்தின் மிகுதியால் தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள். வண்டிக்காரனோ தன் கையிலிருந்த கயிற்றை அப்படியே எறிந்துவிட்டு, முதலியாருக்கும் அவருடைய மனைவிக்குமிடையில் பதுங்கிக்கொண்டான். முதலில் முதலியார் தன் விரோதிகளில் யாரோ அப்படி வளைத்துக்கொண்டனரென்று பதறினார். அப்பேர்ப்பட்ட சம்பவம் அவருக்குப் பலதரம் ஏற்கனவே நேரிட்டிருந்ததாலும், எல்லாம்போக, அச்சமயம் தன்னுடன் தன் சம்ஸாரமிருப்பதை நினைத்தும், மிகவும் மனங்குழம்பினார். ஆனாலும், சீக்கிரம் தன் குழப்பத்தை சமாளித்துக்கொண்டு,

"யாரடா போக்கிரிப்பயல்களா? நான் யாரென்பது தெரியாதோ?" என்று கர்ஜித்தார். ஆனால் மறுவினாடி தன்முன் நின்றுகொண்டிருந்தவர்களிடம் காணப்பட்ட பெருந்தடிகளையும், இருட்டாயிருந்தும் பளபளவென்று ஜ்வலித்த கத்திகளையும் கண்டு, மேலே பேசச் சக்தியற்று, நிறுத்திவிட்டார்.

பிறகு, வந்தவர்களில் முதலில் பேசியவன்,

"ஐயா! நீர் இவ்வூர் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் குருஸ்வாமி முதலியாரென்பது எனக்குத் தெரியும். ஆனாலும், நீர் எங்களை மிரட்டுவது வீண் காரியமென்பது உமக்கே தெரியும். இன்னும் நான் யாரென்பதை நீர் தெரிந்துகொண்டால் அவ்வெண்ணத்தை அடியுடன் விட்டுவிடுவீர். என்னை என் தோழர்கள் நாகலிங்க நாடானென்று அழைப்பார்கள்." என்றான்.

'நாகலிங்க நாடான்' என்ற பெயரைக் கேட்டதும், நம் முதலியாருடைய சப்த நாடிகளும் அடங்கிவிட்டன.

நாகலிங்க நாடான் மேலும் பேசவாரம்பித்தான்.

"ஐயா! நீர் இனி வம்புசெய்யமாட்டீரென்பது திண்ணம். ஆனால் நான் உங்களைக் கொலைசெய்யப்போவதில்லையென்பதை இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். ஓய்! நீர் போலீஸில் உத்தியோகம் செய்கிறீரென்ற தைரியத்தினால் இவ்வூரில் செய்யும் அக்கிரமங்கள் முழுமையும் எனக்குத் தெரியும். ஐயா! நீர் தின்னும் அன்னம் இவ்வூர் ஜனங்களுடையதென்பதையும், அவர்களுடைய பாதுகாப்பின்பொருட்டு வைக்கப்பட்ட ஒரு சேவகனென்பதையும், கிஞ்சித்தும் உணராமல், ஏதோ அதிகாரமே அவதாரம்போல், நீர் ஏழை ஜனங்களைப் பலவிதங்களில் அவமானப்படுத்துவதுமன்றி, ஈவு இரக்கமில்லாமல் நீர் அவர்களைப் பயமுறுத்தி பணம் லஞ்சம் வாங்குவது சுத்த அநியாயம். உம்போன்ற பாபிகளை என்போன்றவர்கள் முன்வந்து தண்டித்தாலொழிய வேறு விமோசனமிருப்பதாய்த் தோன்றவில்லை.

நீர், இன்று காலை, மரகதவல்லியென்ற ஒரு பெண்மணியை 'தட்டுவாணி முண்டை' என்று திட்டினீர். ஓய்! உம்முடைய பெண் எப்பேர்ப்பட்டவளென்பது நீர் வசிக்கும் தெருவிலிருக்கும் ஒவ்வொரு வாலிபனுக்கும் தெரியும். அப்படியிருக்கும்பொழுது, நீர் சுத்தமான அப்பெண்மணியை இவ்விதம் தூஷித்ததற்கு உம்முடைய நாக்கை அறுத்தாலும் பாதகமில்லை. அதுவும் போகட்டும்; நீர் சற்றுநேரத்திற்குமுன் வீட்டிலிருந்து கோயிலுக்குப் புறப்படும்பொழுது வழியில் வந்துகொண்டிருந்த ஒருவன் தும்பியதற்காக, அவனைப் பிடித்து அடித்ததை நானே பார்த்துக்கொண்டிருந்தேன். ஏன் ஐயா! எந்த நியாய சாஸ்திரத்தில் நீர் வெளியே வரும்பொழுது பிறர் தும்பக்கூடாதென்று கூறப்பட்டிருக்கிறது?

ஆகவே, இக் குற்றங்களுக்காக, நான் உம்மைத் தண்டிக்க நிச்சயித்திருக்கிறேன். உமக்குப் பணமே குலதெய்வமென்பதும், தற்சமயம் உம்முடைய மனைவி அணிந்துகொண்டிருக்கும் நகைகளெல்லாம் நீர் ஏழை ஜனங்களை

மிரட்டி வாங்கிய பணத்தாலேயே வாங்கப்பட்டவையென்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், நீர் உடனே அந்நகைகள் எல்லாவற்றையும் கழட்டி என்னிடம் கொடுக்கவேண்டும். எங்கே? சீக்கிரம்." என்று துரிதப்படுத்தினான்.

நம் முதலியாருடைய நிலைமையை நேயர்களே தயவுசெய்து ஊகித்துக்கொள்ளவேண்டும். அவர், தான் திமிறுவது முடியாத காரியமென்பதை நன்குணர்ந்தவராகையால், நகைகளை உடனே கழட்டி, நாகலிங்க நாடானிடம் கொடுத்துவிட்டு, மேலும் என்ன நடக்குமோவென்று நடுங்கி, அசைவற்று உட்கார்ந்துகொண்டிருந்தார்.

பிறகு, நாகலிங்க நாடான்,

"ஐயா! நீர் உம்முடைய வீட்டின் சமீபத்தில் தும்பியவனை ஒரு கன்னத்தில் அடித்தீர். இப்பொழுது இதோ நான் உம்முடைய இரண்டு கன்னங்களிலும் அறையப்போகிறேன்; இந்தாரும்." என்று கூறிக்கொண்டே, திடீரென்று முதலியாருடைய இரு கன்னங்களிலும் பளீர் பளீரென்று இரு அறை கொடுத்தான். அச்சப்தம் குறைந்தது அரை பர்லாங் தூரமாவது கேட்டிருக்கும். அதைக் கேட்டதும், அவருக்கும் அவருடைய மனைவிக்குமிடையில் பதுங்கிக்கொண்டிருந்த வண்டிக்காரன், பயத்தால் தன் பக்கத்திலிருந்த அம்மாதை அப்படியே இறுகக் கட்டிக்கொண்டான். முதலியாருடைய மனைவியும், தன் கண்களை இன்னும் மூடிக்கொண்டிருந்ததால், தன் புருஷனே அவ்விதம் தன்னை பயத்தினால் அணைந்துகொண்டதாக நினைத்து, தம் வண்டிக்காரனைக் கட்டிக்கொண்டாள்.

நிற்க, நாகலிங்க நாடான்,

"குருஸ்வாமி முதலியாரே! நீர் செய்த குற்றங்களுக்கு நான் இப்பொழுதே உம்மைக் கண்டம் துண்டமாக வெட்டியிருப்பேன். ஆனால் நீரும் என்னுடைய தாய்நாட்டில் பிறந்து வளர்ந்த என்னுடைய சகோதரரென்று நினைத்தும், இனியாகிலும் நீர் உம்முடைய கர்வத்தையும் இறுமாப்பையும் விட்டு, திருந்தி, ஜனங்களை சரிவர நடத்

துவீரென்று நம்பியும், இத்துடன் உம்மை விட்டுவிட்டேன். சரி; நீர் போகலாம். நீர் எங்களைப் பிடிக்க முயலமாட்டீரென்று நம்புகிறேன்.'' என்று கூறிவிட்டு, தன் ஆட்களையெல்லாம் போகும்படி ஜாடை செய்தான்.

இதற்குள் நம் முதலியாருக்கு தெய்வத்தின்மேலிருந்த நம்பிக்கையும் பக்தியும் அடியுடன் அழிந்துவிட்டதால் அவர், கெஞ்சிய குரலில் தன் இரு கைகளையும் கூப்பி,

“அப்பா! உனக்கு அநந்தகோடி நமஸ்காரம். நாங்கள் திரும்பி வீட்டிற்குப் போய்விடுகிறோம்,'' என்று கூறவே, நாகலிங்க நாடான்,

“உம்முடைய இஷ்டப்படி செய்யலாம். இன்னும் உம்போன்ற பாபிகள் தெய்வத்தை தர்சனம் செய்யாமலிருப்பதே நலம். ஆமாம்; உஜார். நீர் மேலும் வம்பு செய்தால் நான் என்ன செய்வேனென்பது உமக்கே தெரியும்.'' என்று கூறிக்கொண்டே, தன் ஆட்களெல்லோரும் அதற்குள் போய்விட்டனர் என்பதைத் தெரிந்துகொண்டு, திடீரென்று பாய்ந்து பக்கத்திலிருந்த ஒரு தோட்டத்திற்குள் மறைந்தான்.

நாகலிங்க நாடான் போய்விட்டானென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டதும், குருஸ்வாமி முதலியார், பிழைத்தது புனர்ஜென்மமென்று நினைத்தவர்போல், ‘அப்பாடா!' என்று ஒரு தரம் பெருமூச்செறிந்தார். பிறகு, “என்ன அநியாயம்? சோமவாரம் ஸ்வாமி தர்சனத்தின் பலன் வழியிலேயே கிடைத்துவிட்டதே. நாலாயிரம் ரூபாய் நகைகள் போய்விட்டன. இந்தப் பயல் கொடுத்த அறையினால் கன்னங்கள் அப்பம்போல் வீங்கிவிட்டன.'' என்று சிந்தித்தவண்ணம், திரும்பி, தன் கண்களை நன்றாய்த் திறந்து பார்க்கவே, தன் மனைவி அவ் வண்டிக்காரனை ஆலிங்கனம் செய்துகொண்டிருப்பதைக் கண்டதும், “ஆ! தெய்வமே! இவ்வளவு நடந்தும், என் எதிரிலேயே இன்று முன்னை இப் பயலுடன் சரஸஸல்லாபம் செய்துகொண்டிருக்கிறாளே. என்னடி தட்டுவாணி முண்டை! [illegible]

கெடுக்கவில்லை?'' என்று சீறியவண்ணம் தன் மனைவியின் முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்தார். ஆனால், அம் மாது சிரோமணி, வலி பொறுக்கமாட்டாமல், ஒருதரம் தன் சரீரத்தை நெளித்துக்கொண்டாளேயொழிய வண்டிக்காரனை விடவில்லை.

அத்தியாயம் 14.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் வக்கீல் குமாஸ்தா முத்துராமன், மைனர் கோவிந்தசாமியைக் கொன்றதாக ராமானுஜம் கைதுசெய்யப்பட்ட விஷயத்தை யறிந்ததும் ஆவேசங்கொண்டவன்போல் பாலகிருஷ்ணனை யிழுத்துக்கொண்டு வெளியே ஓடினானென்றும், பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யர் தன் நண்பர் துப்பறியும் ஈசுவரதாஸனுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவ்விருவரும் அங்கு வந்துசேர்ந்தனரென்றும் கூறினோமல்லவோ? பிறகு அங்கு என்ன நடந்ததென்பதை இப்பொழுது கவனிப்போம். அவ்விதம் முத்துராமன் ஓடியதைக் கண்டதும் பாலகிருஷ்ணன், வியப்புற்று, அவனுக்கு, கோவிந்தசாமியைக் கொலைசெய்தது ராமானுஜ மல்லவென்று எளிதில் ரூபிக்க, ஏதோ முக்கியமான விஷயம் தெரிந்திருக்க வேண்டுமென்று நம்பினான். பாலகிருஷ்ணன், தான் பூஷணிப்பேட்டை போகுமுன், முத்துராமனை, மைனர் கோவிந்தசாமியைப் பின்தொடர்ந்து அவன் செய்யும் காரியங்களையும், முடியுமானால் யாருடன் என்னென்ன பேசுகிறானென்பதையும் கவனிக்கும்பொருட்டு ஏற்பாடு செய்திருந்ததை நம் நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். ஆனால் பாலகிருஷ்ணன், வழியில் அதைப்பற்றிப் பேசுவது பிசகென நினைத்து, தன் ஆவலையும் அவசரத்தையும் அடக்கிக்கொண்டு, கடைசியில் சபேசய்யருடைய வீட்டையடைந்ததும், முத்துராமனை விஷயமென்னவென்று கேட்க, அச்சிறுவன், தனக்கு மைனர் கோவிந்தசாமியை வாஸ்தவத்தில் கொலைசெய்தது யாரென்று தெரியு

மென்றும், எல்லாவற்றையும் உடனே இன்ஸ்பெக்டர் சபேசய்யரிடம் கூறுவதாகவும் சொல்லிக்கொண்டே நாம் சொன்னவிதம் பாலகிருஷ்ணனுடன் சபேசய்யர்முன் தோன்றினான்.

நிற்க, சபேசய்யர், பாலகிருஷ்ணனைக் கண்டதும் ஆச்சர்யப்பட்டவராய், பிரியத்துடன் அவனை உட்காரும்படி உபசரித்துவிட்டு, அவனங்குவந்த காரணத்தைக் கேட்குமுன், வக்கீல் குமாஸ்தா முத்துராமன், அந்த பலஹீனமான நிலைமையில் அவ்வளவுதூரம் ஓடிவந்த களைப்பினால், அப்படியே தரையில் விழுந்து மூர்ச்சையானான்.

இதைக் கண்டதும், பாலகிருஷ்ணன், திடுக்கிட்டு "ஓ; இதென்ன அசட்டுத்தனம்? இவனுக்கு உடம்பு சரியாயில்லையென்பதை யறிந்தும், ஒரு வண்டியைப் பிடித்து, அதில் அழைத்துக்கொண்டுவர எனக்கு மூளையில்லாமற் போய்விட்டதே." என்று தன்னைத்தானே வெறுத்து, அச் சிறுவனிடம் ஓடினான். பிறகு, எல்லோருமாகச் சேர்ந்து, அவனுக்குக் களைதீர்த்து பிரக்ஞை வரவேண்டிய சிகிச்சைகளைச் செய்யலுற்றனர். நடுவில் சபேசய்யர், பாலகிருஷ்ணனை நோக்கி,

"அப்பா! இச் சிறுவன் யார்? இவனுக்கென்ன உடம்பு?" என்று அநுதாபத்துடன் வினவ, பாலகிருஷ்ணன்,

"ஸ்வாமி! மைனர் கோவிந்தசாமி கொலைசெய்யப்பட்டபொழுது இவனும் பக்கத்திலிருந்திருக்கிறான். இவன் கொலைசெய்தது ராமானுஜமல்லவென்றும், தனக்கு வாஸ்தவத்தில் கொலைசெய்தவனையும் அவனிருக்குமிடமும் தெரியுமென்று சொல்லுகிறான்." என்று விடையளிக்கவே, சபேசய்யர், வியப்புற்று,

"அப்படியா? சரி; அது எப்படியிருந்தபோதிலும் நாம் இப்பொழுது இவனைத் தொந்தரவு செய்வது பாவம். கால்மணிநேரம் இவன் சிரமபரிகாரம் செய்துகொள்ளவேண்டும்." என்று சொல்லிக்கொண்டிருக்கையில், முத்து

ராமன், மெல்லத் தன் கண்களைத் திறந்து, ஆவலுடன் தனக்குக் குடிக்கக் கொஞ்சம் ஜலம் வேண்டுமென்று ஜாடைசெய்யவே, சபேசய்யர், உள்ளே சென்று, ஒரு லோட்டாவில் கொஞ்சம் வெந்நீரைக் கொண்டுவந்து கொடுத்தார். முத்துராமன், அதைக் குடித்துவிட்டு, மறுபடியும் தன் கண்களை மூடிக்கொள்ளவே, சபேசய்யர், பாலகிருஷ்ணனை நோக்கி,

"சரி; இவன் படுத்துக்கொண்டிருக்கட்டும். நீ வந்து உட்கார்ந்துகொண்டு உனக்குத் தெரிந்ததைச் சொல்." என்று கூறிக்கொண்டே சென்று மறுபடியும் தன் ஆஸனத்திலமர்ந்துகொண்டார். பிறகு, பாலகிருஷ்ணன் ஆதியிலிருந்து நடந்த எல்லாவற்றையும் சொல்லிமுடித்ததும், சபேசய்யர், மேலும் வியப்புற்று,

"பேஷ்! இந்த மைனர் கோவிந்தசாமி இவ்வளவு அயோக்கியனா? சரி; அவன் உன்னைப் பூஷணிப்பேட்டையில் அடைத்துவிட்டதாகச் சொன்னாயே. பிறகு, நீ அங்கிருந்து தப்பியதெப்படி?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"என் நண்பனிடம் கோவிந்தசாமி நேற்று இரவு மாட்டிக்கொண்டதும், என்னை அவ்விதம் பூஷணிப்பேட்டையில் அடைத்துவைத்திருப்பதை ஒப்புக்கொண்டு, அவ்வீட்டின் அடையாளங்களையும் கூறினான். ஆகவே, என் நண்பன், உடனே $11\frac{1}{4}$ மணி வண்டியில் புறப்பட்டுவந்து, இன்று விடியற்காலம் சுமார் 4 மணிக்கு என்னை விடுவித்தான்." என்று விடையளிக்கவே, சபேசய்யர்,

"உன் நண்பன் இங்கிருந்து $11\frac{1}{4}$ மணி வண்டியில் புறப்பட்டுவந்தானென்பதை ரூபிக்கமுடியுமா? ஏனென்றால் சவப்பரீக்ஷை செய்த டாக்டர்கள் கோவிந்தசாமி 12 மணிக்குப் பிறகே கொலை செய்யப்பட்டிருப்பதாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால், உன் நண்பன் $11\frac{1}{4}$ மணி வண்டியில் புறப்பட்டு பூஷணிப்பேட்டை சென்றானென்பதை நாம் ரூபிக்க முடியுமானால் ரொம்பவும் சாதகமாயிருக்கும்." என்றார். உடனே, பாலகிருஷ்ணன்,

"இதை நாங்கள் எளிதில் ரூபிக்க முடியும். எப்படியென்றால், என் நண்பனை அத்தோட்டத்திலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய்விட்ட வண்டிக்காரனை நான் இன்று காலை கண்டு பேசினேன். அவனோ, என் தோழனுக்குப் பூஷணிப்பேட்டை செல்ல டிக்கட்டு வாங்கிக் கொடுத்ததுமன்றி, என் நண்பன் வண்டியில் ஏறியுட்கார்ந்துகொண்டதையும், பிறகு வண்டி புறப்பட்டதையும் பார்த்திருக்கிறான். அவ் வண்டி, மெயிலாகையால், இவ்வூருக்கும் பூஷணிப்பேட்டைக்குமிடையில் நிற்பதில்லை. ஏன் ஸ்வாமி! நமக்கு இந்த சாக்ஷியெல்லாம் தேவையில்லையே. இந்தப் பையன்தான் வாஸ்தவத்தில் கொலைசெய்தவனையும் அவனைக் கண்டுபிடிக்குமிடமும் தனக்குத் தெரியுமென்று சொல்லுகிறானே." என்று கூறவே, சபேசய்யர்,

"அப்படியல்ல; இவனோ சிறு பையன். இவனையே நாம் முழுமையும் நம்புவது சரியல்ல. அதுவுமன்றி, இவன் சொல்லும் ஆஸாமி இதற்குள் கம்பிநீட்டியிருக்கக் கூடும். ஆகவே, நாம் உன் நண்பனைக் காப்பாற்ற வேறு வழிகளுண்டாவென்றும் பார்க்கவேண்டியது அவசியம். சரி; அதிருக்கட்டும். உன் நண்பனுடைய வீட்டிலிருக்கும் கத்திகளில் ஒன்று கொலைசெய்யப்பட்ட இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதெப்படி? அது உனக்குத் தெரியுமோ?" என்று வினவினார். பாலகிருஷ்ணன்,

"அடாடா; மறந்தேவிட்டேன். அதைப்பற்றிய விஷயமும் எனக்குத் தெரியும். நான் முத்தையா செட்டியாரைக் கொலைசெய்தவன் யாரென்பதைக் கண்டுபிடிக்காமல் விடுவதில்லையென்று சபதம் செய்துகொண்டது உங்களுக்கே தெரியும். அதைப்பற்றி நாமிருவரும் அன்று மாலை பேசியபொழுது, நீங்கள் இது மிகவும் ஆபத்தான காரியமென்றும், நான் மிகவும் உஷாராயிருக்கவேண்டுமென்றும் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆகவே நான், எல்லாவற்றிற்கும் நம்மிடம் ஒரு நல்ல ஆயுதமிருப்பது நலமென நினைத்து, இதை என் நண்பனிடம் [illegible]டேன். அவன், தன் வீட்டில் [illegible],

அவைகளில் ஒன்றை எனக்குக் கொடுப்பதாகவும் கூறினான். ஆனால், அவைகளை வெளியில் எடுக்க அவனுடைய தந்தை இஷ்டப்படுவதில்லையாகையால், அவர் அதைக் கண்டுபிடிக்காமலிருக்கும்பொருட்டு, ஒரு கத்தியை மட்டும் எடுத்துக்கொண்டு, அதனுடைய உறையை அந்தப் பீரோவிலேயே வைத்துவிட்டோம். பிறகு, நான் பூஷணிப்பேட்டைக்குச் சென்றபொழுது, அக் கத்தி என்னிடமிருந்தது. ஆனால், அது என்னிடமிருப்பதை யறிந்த கோவிந்தசாமி அதை என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டுபோய்விட்டான்." என்றான். பிறகு, கொஞ்சநேரம் சபேசய்யர் சிந்தனையிலாழ்ந்திருந்தார். அதன் முடிவில்,

"பேஷ்; இதில் சந்தேகமில்லை. கோவிந்தசாமியைக் கொலைசெய்தவனும் நாகலிங்க நாடானென்பது திண்ணம். ஏனென்றால் நீ சொல்லுவதிலிருந்து முத்தையா செட்டியாரைக் கொலைசெய்தது நாகலிங்க நாடானென்பது கோவிந்தசாமிக்குத் தெரியுமென்றும், அவன் எப்படியோ நாடானுடைய இரஹஸ்யத்தை யறிந்து, அவனைப் போலீஸாரிடம் காட்டிக்கொடுத்து, அதனால் வரக்கூடிய லாபத்தையும் கீர்த்தியையு மடைய முயன்றானென்பதும் வெளியாகிறது. நாகலிங்க நாடானை மோசம் செய்வதும் ஏமாற்றுவதும் மிகவும் அபாயகரமான காரியம். ஆகவே, அவனுக்கு கோவிந்தசாமியின் எண்ணம் எப்படியோ தெரிந்து, அவனே இவனையும் ஒழித்துவிட்டான்." என்று சொல்லிக் கொண்டிருக்கையில்,

"மைனரைக் கொன்றது நாகலிங்க நாடான் அல்ல." என்று தாழ்ந்த குரலில் ஒரு சப்தம் வரவே, எல்லோரும் திடுக்கிட்டு, திரும்பிப் பார்க்க, நம் குமாஸ்தா முத்துராமன், தன் இடத்தில் எழுந்துட்கார்ந்துகொண்டிருப்பதைக் கண்டனர். சபேசய்யர், அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், திகைப்புற்று, எழுந்து, அவனிடம் சென்று, பிரியத்துடன் அவனைத் தட்டிக்கொடுத்தவண்ணம்,

"அப்பா! அப்[illegible]னால், மைன[illegible] கொலைசெய்தது யார்?" என்[illegible]ன், இன்

188786.

னும் தாராளமாய்ப் பேசச் சக்தியற்றவனுய், பெருமூச் செறிந்தவண்ணம்;

"மைனரைக் கொன்றது குருமூர்த்தி ஸ்வாமிகள்." என்று விடையளித்தான்.

இதைக் கேட்டதும் அங்கிருந்த எல்லோருக்கு முண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. நிற்க, அவ்வறையின் வெளியே நின்றுகொண்டிருந்த ஒரு போலீஸ்காரன், குருமூர்த்தி ஸ்வாமிகளுடைய பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டு, மேலும் அங்கு தாமதிக்காமல், உடனே அங்கிருந்து போய்விட்டான். அச்சமயம் மணி 11க்கு மேலிருக்கும்.

சபேசய்யருக்கு நம் குருமூர்த்தி ஸ்வாமிகளிடம் அளவற்ற மரியாதையும் பக்தியுமுண்டு. உடனே அவருக்கு, அன்று காலை மைனர் கோவிந்தசாமி கொலை செய்யப்பட்டுக் கிடந்த அத் தோட்டத்தில், ஸ்வாமிகள் தன்னிடம் கொடுத்த கடிதத்தின் ஞாபகம் வந்தது. அவர், அதில் என்ன எழுதியிருக்கக்கூடுமென்று வியப்புற்று, பேசவும் சக்தியற்றவர்போல், கொஞ்சநேரம் மௌனம் சாதித்தார். பிறகு, ஆவலுடன் முத்துராமனை நோக்கி,

"அப்பா! உனக்குத் தெரிந்ததை விபரமாய்ச் சொல்லு.". என்று கூறியதும், அச் சிறுவன், கெஞ்சிய குரலில்,

"மாமா! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். எனக்குப் பேசச் சக்தியில்லை. ரொம்பவும் பசிக்கிறது—" என்று அவன் மேலே பேசுமுன், சபேசய்யர்,

"அப்பா! இரு; இதோ சாதம் போடச் சொல்லுகிறேன்." என்று கூறிவிட்டு, ஓடி, சமையலறையிலிருந்த தன் மனைவியிடம் உடனே கொஞ்சம் ரஸமன்னம் எடுத்து வரும்படி கூறவே, பெருந்தன்மை அழகு பதிபக்தி இவைகள் முக்தியிலே [illegible]க்கப்பெற்ற அப்பெண்மணி, தான் அச்[illegible] காரியத்தை [illegible] [illegible] 'இன்[illegible]லை

கூட்டுக்கூட ரஸமன்னமும், மற்றொரு பாத்திரத்தில் வெந்நீரும் எடுத்துச் சென்று முத்துராமன் முன்னிலையில் வைத்தாள். அச் சிறுவன், அதை ஆவலுடனும் களிப்புடனும் புசித்துவிட்டு, கைகளை சுத்தம் செய்துகொண்டு, 'நான் தயார்' என்று கூறுவதுபோல் சபேசய்யரை யுற்றுநோக்கினன். அவர்,

"வா அப்பா! இப்படி உட்கார்ந்துகொள்." என்று பிரியத்துடன் அச் சிறுவனை மெள்ள அழைத்துச்சென்று தன் பக்கத்தி லுட்காரவைத்துக்கொண்டு, "எங்கே உனக்குத் தெரிந்ததைச் சொல்; கேட்போம்." என்று கூறவே, அச் சிறுவன், பாலகிருஷ்ணனைக் காண்பித்து.

"மாமா! இவர் சனிக்கிழமை காலை என்னிடம் வந்து மைனர் கோவிந்தசாமியை என் கண்பார்வையிலேயே வைத்துக்கொளும்படி சொன்னார். ஆகவே, நேற்று இரவு, மைனரும் இவருடைய நண்பர் ராமானுஜ முதலியாரும் அத் தோட்டத்தி லுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபொழுது, நானும் பக்கத்திலிருந்த சில புஷ்பச் செடிகளின் மறைவில் ஒளிந்துகொண்டிருந்தேன். கடைசியில் சுமார் 11 மணிக்கு, ராமானுஜ முதலியார் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். அவர் இரண்டடி தூரம் சென்றதும், மைனர், திடீரென்று தன் மடியிலிருந்து ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு, அவரை நோக்கி ஓடினர். ஆனால் தெய்வானுக்கிரகத்தினுல் ராமானுஜ முதலியார் அச்சமயம் பின்பக்கம் திரும்பவே, மைனர், தான் எண்ணிய காரியத்தைச் செய்யப் பயந்தவர்போல், தன் கத்தியை மறைத்துக்கொண்டு, மறுபடியும் ஒரு ஆஸனத்தி லுட்காந்துகொண்டார். ராமானுஜ முதலியார் தனக்கு நேரிடவிருந்த ஆபத்தைக் கவனிக்கவேயில்லை. அவர், உடனே வெளியே சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த பல வண்டிகளில் ஒன்றில் ஏறியுட்கார்ந்துகொண்டதும், அது வேகமாய்ப் போய்விட்டது.

நிற்க, அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்தபொழுது, கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு மரத்தடியி லுட்கார்ந்து

கொண்டு குருமூர்த்தி ஸ்வாமிகள் அவர்களுடைய சம்பாஷணையைக் கவனித்துக்கொண்டிருந்தார். அவர் ராமானுஜ முதலியார் சென்றதும் மைனரிடம் வந்து பக்கத்தி லுட்கார்ந்துகொண்டார். அவர்களுக்கு நான் இருந்தது தெரியாது. பிறகு அவ்விருவரும் சுமார் 1 மணி நேரம்வரையில் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் பேசியதை நான் கேட்கமுடியவில்லை. வரவர, குருமூர்த்தி ஸ்வாமிகள் கோபமாய்ப் பேசுவதுபோலிருந்தது. மைனர் அசைவற்று பயந்தவர்போல் காணப்பட்டார். கடைசியில் ஸ்வாமிகள் திடீரென்று, மைனரிடமிருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு, அதை மைனருடைய மார்பில் பாய்ச்சிவிட்டார்.

மாமா! எனக்கு புஸ்தகங்களில் கொலையைப்பற்றி வாசிக்கும்பொழுதே உள்நடுக்கமெடுத்து ஜுரம் வந்துவிடும். அதிலும் என் கண்ணெதிரில் இது நடக்கவே, நான் அனுபவித்த அவஸ்தை தெய்வத்துக்குத்தான் தெரியும். முதலில் 'ஐயோ' வென்று கூச்சலிடலாமாவென்று பார்த்தேன். ஆனால் நான் அப்படிச் செய்தால் நானங்கிருப்பதையறிந்து, ஸ்வாமிகள் என்னையும் கொன்றுவிடுவாரென்று பயந்து, என் மேல் சவுக்கத்தை வாயில் திணித்துக்கொண்டேன். குருமூர்த்தி ஸ்வாமிகள் கொலை செய்த பிறகு, கத்தியை அப்படியே என்பக்கம் எறிந்துவிட்டு, மடமடவென்று போய்விட்டார். அவர் போய்விட்டாரென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு நானும் வெளியே சென்றேன். பிறகு, உடனே உங்களிடம் வந்து நடந்த விஷயத்தைச் சொல்லலாமென்று நினைத்தேன். ஆனால் பயத்தினால் எனக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டதுபோலிருந்தது. நான் அச்சமயம் பட்ட கஷ்டத்தை என்னால் எடுத்துச் சொல்லமுடியவில்லை. ஆகவே, பொழுது விடிந்ததும் பார்த்துக்கொள்ளலாமென்று தீர்மானித்து, பிசாசைக் கண்டவன்போல் வீட்டிற்கு ஓடினேன். அதன் பிறகு, இன்று மாலை 6 மணிக்குத்தான் நல்ல நினைவு வந்தது. நல்ல வேளையாய் பாலகிருஷ்ண செட்டியாரும் அச்சமயம் வர, உடனே இங்கு வந்தேன்." என்று முடித்தான்.

இதைக் கேட்டதும் சபேசய்யர் மறுபடியும் கொஞ்ச நேரம் பேசச் சக்தியற்றவர்போல் தரையை யுற்றுநோக்கியவண்ணமிருந்தார். பிறகு, பெருமூச்செறிந்துகொண்டே திரும்பி, தன் நண்பர் ஈஸ்வரதாஸை நோக்கி,

"தாஸ்! இந்த குருமூர்த்தி ஸ்வாமிகளே நாம் தேடும் நாகலிங்க நாடானென்பது நிச்சயம்." என்று சொல்லவே, ஈச்வரதாஸ்,

"அதில் சந்தேகமில்லை. நாம் உடனே சென்று அவனைக் கைது செய்யவேண்டும்." என்று ஆத்திரத்துடன் கூறினார். ஆனால் சபேசய்யர், அமைதியுடன்,

"ஐயா! உள்ளதைச் சொல்லுமிடத்து, எனக்கு அவனைப் பிடித்து தண்டனைக்குள்ளாக்க இஷ்டமில்லை. அவன் திருடனென்பதும், இரு கொலைகளைச் செய்தானென்பதும் வாஸ்தவமே. ஆனால் அவன் இதுவரையில் சூது, குடி, தாஸி, இத்தகைய காரியங்களில் பணத்தைச்செலவழிக்கும் நீச சுபாவமுள்ள பணக்காரர்களுடைய வீட்டில் மட்டும் கொள்ளையடித்தானேயொழிய, ஏழைகளையும் நல்லவர்களையும் தொந்தரவு செய்யவேயில்லை. அவன் இந்த குருமூர்த்தி ஸ்வாமிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு, இவ்வூரில் ஏழை ஜனங்களின்பொருட்டு செய்திருக்கும் காரியங்களை நினைக்க, எனக்கு குருமூர்த்தி ஸ்வாமிகளிடமிருந்த மரியாதையும் பக்தியும் அதிகரிக்கின்றனவே யொழிய, அவனிடம் வெறுப்பும் அவனைப் பிடிக்கவேண்டுமென்ற வீராவேசமும் உண்டாகவில்லை. நாம் அவனைப் பிடித்து மரண தண்டனைக் குள்ளாக்குவோமாகில் இதுவரையில் அவனால் ரக்ஷிக்கப்பட்டுவந்த ஆயிரக்கணக்கான ஜனங்களை நாம் வறுமைக்கும் கஷ்டத்துக்குமுள்ளாக்கிய பாபம் நம்மைச் சேரும். அவன் முத்தையா செட்டியாரைக் கொலை செய்ததால் உலகத்துக்கு மிகவும் நன்மை செய்தானென்றே சொல்லவேண்டும். அப் பாபி தன் பிள்ளையையும் வீட்டைவிட்டு அடித்துத் துறத்தியவன். இந்த மைனர் கோவிந்தசாமியும் பரம அயோக்கியனென்பது இப்பொழுது வெளியாகிறது.

ஆனால் பரோபகார சிந்தனையினால் தூண்டப்பட்டு ஏழைகளின் க்ஷேமத்தின்பொருட்டு இவ்வளவுதூரம் செய்துவரும் இந்த நாகலிங்க நாடான் தான் செய்த குற்றங்களுக்காக, சுத்த நிரபராதிகளான இரு வாலியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதை யறிந்தும் சும்மாயிருந்தது மன்றி அவர்களே குற்றவாளிகளென்று ரூபிக்க, தானும் சாதகமாயிருந்தது மிகவும் வியக்கத்தக்கதே. ஆனால் அதற்கும் ஏதேனும் காரணம் இன்று காலை என்னிடம் கொடுத்த கடிதத்தில் எழுதியிருப்பானென்று நம்புகிறேன். இவ்வளவு உதாரகுணங்கள் வாய்ந்த அவன் இவ் வாலிபர்கள் தங்களுடைய உயிர்களை இழக்க இடங்கொடுக்கமாட்டானென்பது திண்ணம். சரி; ஆனால்—'' என்று அவர் மேலே பேசுமுன், அவ்வறையை நோக்கி யாரோ வரும் காலடிச்சப்தம் கேட்கவே, எல்லோரும் வெளிப்பக்கம் திரும்பினார்கள். மறுநிமிஷம் உள்ளே நுழைந்தவரைக் கண்டதும், சபேசய்யர் அப்படியே தன் நாற்காலியிலிருந்து தாவி தரையில் நின்றார். அச்சமயம் அவர் தன் கண்களையே நம்ப இஷ்டப்படாதவர்போல் காணப்பட்டார். ஏனென்றால், அவ்விதம் அங்கு தோன்றியது நம் குருமூர்த்தி ஸ்வாமிகளே. அங்கிருந்த எல்லோரும், அவரைப் பார்த்ததும், தங்களை அறியாமலே அவரை நமஸ்கரித்தனர்.

நிற்க, உள்ளே நுழைந்த ஸ்வாமிகள், தன் சுபாவ கம்பீரத்துடனும், புனசிரிப்புடனும்,

" சபேசய்யர்வாள்! நான் கொலைபாதகன் என்பதை அறிந்தும், நீங்கள் உடனே என்மீது பாய்ந்து என் கரங்களுக்கு விலங்கிட்டு, என்னைக் கைது செய்யாமல், என்னை நமஸ்கரிப்பதைக் காண எனக்குண்டாகும் சந்தோஷமும் ஆச்சர்யமும் அளவற்றது. ஸ்வாமி! இதுவரையில், நீங்கள் உங்களுக்கு என்னைப்பற்றியுள்ள அபிப்பிராயத்தை வெளியிட்டுக்கொண்டிருந்தபொழுது நானும் திண்ணையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். இப்பவும், உங்களுக்கு என்மீதுள்ள மரியாதையையும் நீங்கள் என்னைக் கைது செய்யத் தயங்குவதையும் கண்டு நான் சந்தோஷப்படவில்லை. என்

சந்தோஷத்திற்குக் காரணம், உங்களுக்கு சாதாரணமாய் ஏழை ஜனங்களிடமுள்ள அநுதாபமும் அவர்களை உங்களால் இயன்றவரையில் காப்பாற்றவேண்டுமென்ற அவாவுமேயின்றி வேறல்ல. சபேசய்யர்வாள்! தெய்வம் அந்த ஏழை ஜனங்களின் பொருட்டு உங்களை தீர்க்காயுளுடனிருக்க ஆசீர்வதிப்பாராக. எனக்கு ஆதியிலிருந்தே உங்களிடம் ஒருவித பிரியமும் மரியாதையு முண்டென்பதை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஸ்வாமி! நம் நாட்டிலிருக்கும் ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரும் உங்களைப்போலிருப்பாராகில் நமக்கு இவ்வளவு அகௌரவமும் கஷ்டமும் வந்திருக்கமுடியாது. ஆனால் திருடர்களில் ஒருவனாகிய நான் இவ்விதம் பேசுவது ஆச்சர்யமாயிருக்கலாம். நீங்கள் இதற்குள் நானே நாகலிங்க நாடானென்பதை யூகித்துக்கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன்.

நான் படிப்பற்றமுண்டமல்ல. நான் பீ. ஏ. பரீக்ஷையில் தேறியிருக்கிறேனென்பதை யறிய நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். தற்சமயம் என்னைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 200 பேர்களுண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் நன்றாய்ப் படித்தவர்களே. நாங்கள் நியாயமான வழியில் பிழைக்கப் பலவிதம் பிரயத்தனப்பட்டும் அது சாத்தியமில்லாமற் போய்விட்டது. எங்கு சென்றாலும் ஒரு அந்நிய நாட்டானால் அவமானப்படுத்தப்படுவதையும், அப்படியில்லாவிட்டால் நம் தேசத்திலேயே பிறந்து வளர்ந்து அதிர்ஷ்டவசத்தால் ஏதேஷ்டமான திரவியமுள்ள பணக்காரர்களால் ஏதோ மிருகங்களென மதிக்கப்பட்டு, சுவானங்களைப்போல் நடத்தப்படுவதையும் கண்டு எங்களால் சகிக்க முடியவில்லை. ஐயா! அந்நிய நாட்டார் நம்மை அவமானப்படுத்தி நம் தனத்தை அபஹரிப்பது அநியாயம். அதிலும் நான் சொன்ன நம் தேசத்தைச் சேர்ந்த பணக்காரர்கள், கிஞ்சிற்றும் ஈவு இரக்கமின்றி, ஏழை ஜனங்களின் சரீர உழைப்பினால், தாங்களோ அல்லது தங்களுடைய முன்னோர்களோ சேகரித்த பண மமதையினால் தங்கள்பொருட்டு உயிரை

விடும் ஜனங்களை அவமானப்படுத்துவது பொறுக்கத்தக்கதோ? அதுவுமன்றி, அவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவழிக்கும் வழிகளோ மிகவும் அவமானத்திற்கிடம். அன்று வக்கீல் ராமஸ்வாமி அய்யர் வீட்டில் நடந்த சதிர்க்கச்சேரியின் பொருட்டும், விருந்தின்பொருட்டும், அவர் குறைந்தது 1000 ரூபாயாவது செலவழித்திருப்பாரென்பது உங்களுக்கே தெரியும். வாஸ்தவமாய் அப்பணம் அவராலேயே சம்பாதிக்கப்பட்டதாயிருக்கலாம். ஆனாலும், தன் நாட்டில் பிறந்து வளர்ந்து தன் கீழ் வேலைசெய்யும் ஏழை ஜனங்கள் உண்ண சோறும், வசிக்க வீடும், உடுக்க துணியுமின்றி தவிக்கும்பொழுது ஒருவன் இவ்விதம் பணத்தைக் கண்டபடி செலவழிப்பது தர்மநியாயத்திற்குக் கட்டுப்பட்ட எவனாலும் சம்மதிக்கத்தக்கதல்ல. ஐயா! நம் நாட்டில் கஷ்டப்படுபவர்கள் கேவலம் ஏழைகள் மட்டுமல்ல. எங்களைப்போல் நன்றாய்ப் படித்து நியாயமாய் நல்ல உத்தியோகங்களிலிருந்து பெண்டு பிள்ளைகளுடன் சந்தோஷமாய் வாழவேண்டிய வாலிபர்கள் ஆயிரக்கணக்கில் பால்ய வயதிலேயே தங்களுடைய இளங்குழந்தைகளையும் யௌவன மனைவிகளையும் வைத்து ரக்ஷிக்க வகையின்றி, உலகத்தையே வெறுத்து, தங்களுடைய உயிர்களையும் மாய்த்துக் கொள்ளுகின்றனர்.

நம் நாட்டிலுள்ள நல்ல உத்தியோகங்களையெல்லாம் அநேகமாய் மேல் நாட்டாரே அநுபவித்துவருகின்றனர். அப்படியே சில பாக்கியிருக்குமாகில் அவைகள் ஏற்கனவே பெரும் பதவியிலிருக்கும் நான் சொன்ன பணக்காரர்களுடைய புத்திரர்களுக்கும் அவர்களைச் சேர்ந்த உறவினர்களுக்கும் போய்ச்சேருமேயின்றி எங்களைப்போல் எளிய குலத்தில் பிறந்தவனுக்கு எவ்வளவுதூரம் படித்தவனாயிருந்தபோதிலும் கிட்டுவதில்லை. ஆகவே, நானும் என் தோழர்களும் இவ்வழியில் இறங்கியதற்குக் காரணம் இதுவே. இப்பவும் எங்களைத் திருடர்களென்று பலர் கூறலாம். ஆனால் நாங்கள் செய்வது மிகவும் நியாயமென்பதே எங்களுடைய அபிப்பிராயம். நாங்கள் ஏழைகளையும் யோக்கியர்

களையும் சிறிதும் ஹிம்சிப்பதில்லை. இவ்விதம் ஏழைகளும் எங்களைப்போன்ற படித்த வாலிபர்களும் கஷ்டப்படுவதற்குக் காரணம், நான் சொன்ன அப் பணக்காரர்களுடைய பச்சாதாபமற்ற சுபாவமும் அனாவசியமான திரவியமுமே என்பது எங்களுடைய எண்ணமாகையால், அவர்களிடமுள்ள அந்த அனாவசியமான திரவியத்தையே நாங்கள் கொள்ளையடிப்பது வழக்கம். அதுவுமன்றி நாங்கள் அப்படிக் கொள்ளையடித்த பணத்தை எங்கள் பொருட்டுமட்டும் செலவழிப்பதில்லை. நாங்களெல்லோரும் விவாஹம் செய்துகொள்ளுவதில்லையென்று சபதம் செய்துகொண்ட பிரும்மசாரிகள். நாங்கள் தினந்தோறும் ஒரேவேளை சுவல்ப ஆகாரம் சாப்பிடுவது வழக்கம். ஆகவே, நாங்கள் கொள்ளையடிக்கும் பணம் அநேகமாய் எளிய நிலைமையிலிருக்கும் யோக்கியர்களின் பொருட்டே உபயோகமாகும். எங்களைப் பிடித்து நரகவேதனைகளுக்குள்ளாக்கவேண்டுமென்று பிரியப்படுவன் வக்கீல் ராமஸ்வாமி அய்யர் இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவனிருப்பானாகில், நாங்கள் அதிலிருந்து தப்பி மறுபடியும் தங்களிடம் வந்துசேருமாறு தெய்வத்தை மனப்பூர்வமாய் பிரார்த்திக்கக் கூடிய ஏழை ஜனங்களில் கண்டிப்பாய் 100 பேராவது இருப்பார்களென்பது திண்ணம்.

இப்பொழுது, நகைவியாபாரி முத்தையச் செட்டியாரையும் மைனர் கோவிந்தசாமியையும் நானே கொலை செய்தேனென்பதை ஒப்புக்கொள்ளுவதுமன்றி அவர்களை ஏன் கொலைசெய்தேனென்பதையும் சொல்லுகிறேன். நாங்கள் திருடர்களாயிருந்தபோதிலும், எங்களுக்கு பல கட்டுப்பாடுகளுண்டு. அதன் பிரகாரம், எங்களில் ஒருவன் மற்றொருவனிடம் புளுகுவானாகில், அவனுக்கு 12 சவுக்கடி கொடுக்கப்படும். இன்னும் ஒருவன் மற்றொருவனையோ அல்லது எங்கள் எல்லோரையுமோ போலீஸாரிடம் காட்டிக்கொடுக்க முயலுவானாகில், அவனுக்கு உடனே மரண தண்டனை விதிக்கப்படும். எங்கள் கூட்டத்தில் சேரும் ஒவ்வொருவனும் முதலில் இந்த நிபந்தனைகளுக்குத் தான்

கட்டுப்படுவதாக சத்தியம் செய்யவேண்டும். நகை வியாபாரி முத்தையா செட்டியும் எங்களைச் சேர்ந்தவனென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நாங்கள் கொள்ளையடித்ததும், அதில் நகைகளிருக்குமானால் அவைகளை முத்தையா செட்டியிடம் கொடுத்துப் பணமாக மாற்றிக்கொள்ளுவது வழக்கம். செட்டி ஏற்கனவே இவ்வூரில் நல்ல பெயர் வாங்கியிருந்ததால், அவனை ஒருவரும் சந்தேகிக்கவில்லை. ஒரு சமயம் எனக்குத் திடீரென்று 1000 ரூபாய் பணம் அவசியமாயிருந்தது. எனக்கு முத்தையா செட்டியிடம் எப்பொழுதும் பெருந்தொகை ரொக்கமிருக்குமென்பது நன்றாய்த் தெரியும். அன்றும் அவனிடம் 5000 ரூபாய்க்கு மேலிருந்ததை நான் அறிவேன். ஆனால் நான் அவனைக் கேட்டபொழுது, அவன் தன்னிடம் பணமே இல்லையென்று புளுகினான். பிறகு நான் அவனுடைய உத்தரவில்லாமலே எனக்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டதுமன்றி, அவன் அவ்விதம் புளுகிய குற்றத்திற்காக எங்களுடைய கட்டுப்பாடுகளின் பிரகாரம் அவனை தண்டிக்க ஏற்பாடு செய்தேன். முதலில் சவுக்கடி விழுந்ததும் அவனுக்குண்டான கோபத்தில் அவன் எங்களெல்லோரையும் போலீஸாரிடம் காட்டிக்கொடுக்கத் தீர்மானித்தான். இவ்விஷயம் எனக்கு அவன் கொலைசெய்யப்பட்ட தினம் மாலை 7 மணிக்குத்தான் எட்டியது உடனே அவனுக்கு மரணதண்டனை விதிக்க நிச்சயித்தேன். பிறர் பார்க்க முடியாதவகையில் அவன் வீட்டிற்குள் நுழைய இரஹஸ்யமான வழியொன்றுண்டு. நான் அன்று இரவு சுமார் 11 மணிக்கு இதே வேஷத்தில் அவ் வீட்டிற்குள் நுழைந்ததுமன்றி, அஜாக்கிரதையினால் நான் சென்ற இரஹஸ்ய வழியை உட்பக்கம் தாளிட மறந்துவிட்டேன். பிறகு, நான் செட்டிப்பயலைக் கொலை செய்துவிட்டு, அவனிடமுள்ள பணம், நகைகள், பத்திரங்கள் முதலியவற்றைக் களவாடிக்கொண்டிருக்கையில், எப்படியோ இந்த மைனர் கோவிந்தசாமி உள்ளே வந்து என்னைப் பார்த்துவிட்டான். ஆனால் அவன் நான் தனக்குவேண்டிய பத்

திரங்களைக் கொடுக்கும்பக்ஷத்தில், வாயை மூடிக்கொண்டிருப்பதுமன்றி, தானும் எங்கள் கூட்டத்தில் சேருவதாக வாக்களித்தான். நானும் முதலில் அவனை நம்பிவிட்டேன். ஆனால், பிறகு நான் இரஹஸ்யமாய் அவனைப்பற்றி விசாரித்ததிலிருந்து அவன் பரம அயோக்கியனென்பதுடன் கூட, முடிவில் என்னைப் போலீஸாரிடம் காட்டிக்கொடுத்து, அதனால் வரக்கூடிய லாபத்தை யடைய சூழ்ச்சி செய்கிறானென்பது வெளியாயிற்று. அதற்குள் அவனும் எங்களுடைய கூட்டத்தில் சேர்ந்து எங்களுடைய நிபந்தனைகளுக்குத் தான் கட்டுப்படுவதாக சத்தியம் செய்துவிட்டானாகையால், அவனுக்கும் மரணதண்டனை விதித்தேன்.

நான் இவ்வீட்டிற்குள் நுழைந்தபொழுது நீங்கள், இவ்வளவுதூரம் பரோபகார சிந்தனையினால் தூண்டப்பட்டு, ஏழைகளுக்கு உதவிபுரிந்துவரும் நான், இவ்விதம் நான் செய்த குற்றங்களுக்காக, நிரபராதிகளான இரு வாலிபர்கள் கைதுசெய்யப்பட இடங்கொடுத்ததுமன்றி, அதற்கு சாதகமாயுமிருந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டீர்கள். சபேசய்யர்வாள்! நான் அப்படிச் செய்ததற்குப் பல காரணங்களுண்டு. முதலாவது, போலீஸாருடைய சந்தேகம் ஒருதரம் ஒருவன்மீது விழுந்துவிட்டால், பிறகு அவர்கள் தங்களுடைய கவனத்தை வேறு திசைகளில் செலுத்தமாட்டார்களென்பது எனக்குத் தெரியும். இன்னும் தற்சமயம் கைதுசெய்யப்பட்டிருக்கும் வாலிபர்கள்வாஸ்தவத்தில் நிரபராதிகளாகையால், அவர்கள் முடிவில் எப்படியும் குற்றவாளிகளல்லவென்று கண்டுபிடிக்கப்பட்டு விடுதலையடைவார்களென்று நம்பினேன். அப்படியே அவர்கள் தப்ப வழியின்றி குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டிருந்தால், நான் சமயத்தில் தோன்றி, என் குற்றங்களை ஒப்புக்கொண்டு அவர்களைக் காப்பாற்றியிருப்பேனென்பது, என் குலதெய்வமாகிய பழனி ஆண்டவர் அறிந்த விஷயம். ஆனால் இதை நீங்கள் இப்பொழுது நம்பமாட்டீர்கள். சரி; அதிருக்கட்டும். நான் இன்று அத் தோட்டத்தில் உம்மிடம் கொடுத்த அக் கடிதத்தைத் தயவுசெய்து உடனே எடுத்து வாசித்துப்

பீரும்." என்று சொல்லவே, சபேசய்யர், தன் மேஜையிலிருந்து அக் கடிதத்தை எடுத்துக் கீழ்க்கண்டவாறு வாசித்தார்.

"இன்ஸ்பெக்டர் சபேசய்யர் அவர்களுக்கு, இதுவரையில் இவ்வூரில் அனைவரும் குருமூர்த்தி ஸ்வாமிகள் என்று நினைத்துக் கொண்டாடிவரும் நான் வாஸ்தவத்தில் நீங்கள் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருக்கும் நாகலிங்க நாடானேயொழிய வேறல்ல.

நானே நகை வியாபாரி முத்தையா செட்டியையும், மைனர் கோவிந்தசாமியையும் கொலைசெய்தவன். முத்தையா செட்டியைக் கொன்ற குற்றத்திற்காக, அவனுடைய மகன் கைதுசெய்யப்பட்டிருப்பதும் மைனர் கோவிந்தசாமியைக் கொன்றதற்காக ராமானுஜமென்ற வாலிபன் கைதுசெய்யப்படுவானென்பதும் நான் அறிந்த விஷயமே. இன்னும் இவ்விரு வாலிபர்களும் கைதுசெய்யப்பட நானே சாதகமாயிருந்தேனென்பதையும் அறியவும். ஆனால் இவ்வாலிபர்கள் இக் குற்றங்களுக்காக தங்களுடைய உயிரை விட நேரிட்டால் நானே அவர்களைக் காப்பாற்றுவேனென்பது பிறகு வெளியாகும். இப்படிக்கு,

ஏழைகளின் ஊழியன், நாகலிங்க நாடான்."

இக் கடிதத்தை வாசித்தானதும், சபேசய்யர் அதை மறுபடியும் மடித்து தன் மேஜைக்குள் வைத்துவிட்டுத் திரும்பி நாகலிங்க நாடானுடைய முகத்தை உற்றுநோக்கினார். நாகலிங்க நாடானுடைய முகத்தில் கம்பீரமும் பெருந்தன்மையும் மேலும் புலப்பட்டனவேயன்றி பயத்தின் குறிகள் சிறிதும் காணப்படவில்லை. அவன் அவ்வறைக்குள் நுழைந்ததுமுதற்கொண்டு நின்றுகொண்டேயிருந்தானாகையால், சபேசய்யர், தன் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியைக் காண்பித்து, அவனை அமர்ந்துகொள்ளும்படி கூறவே, நாடான்,

"ஸ்வாமி! நீங்கள் இவ்விதம் என்னை மரியாதை செய்வது வெளியாகுமானால், அது உங்களுக்கே ஆபத்தாய்

முடியும்." என்று சிரித்துக்கொண்டே, அந்த நாற்காலியிலுட்கார்ந்துகொண்டான். உடனே சபேசய்யர்,

"அதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். சரி; இப்பொழுது நீர் இங்கு வந்த காரணமென்ன?" என்று வினவ, நாடான்,

"ஸ்வாமி! நான் எக்காரியத்தையும் அரைகுறையாய்ச் செய்வதில்லை. போலீஸார் என் சம்பந்தமாக என்னென்ன செய்கிறார்களென்பது எனக்கு உடனே தெரிய ஏற்பாடு செய்திருக்கிறேன். எப்படியென்றால் தற்சமயம் உங்களுடைய போலீஸ் ஸ்டேஷனிலுள்ள சேவகர்களில் என்னைச் சேர்ந்தவர்கள் 6 பேர்களுண்டு. அவர்களில் ஒருவன் ஸப் இன்ஸ்பெக்டர் குருஸ்வாமி முதலியார் வீட்டிலிருக்கிறான். உம்முடைய வீட்டில் இதுவரையிலிருந்த போலீஸ்காரனும் என்னுடைய ஆளே. அவன் மைனர் கோவிந்தசாமியைக் கொன்றது குருமூர்த்தி ஸ்வாமிகள் என்று இச் சிறுவன் (முத்துராமன்) கூறியதைக் கேட்டதும், இவ்விஷயத்தை உடனே எனக்குச் சொல்லியனுப்பினான். ஐயா! நான் எப்பொழுதும் போலீஸாருக்குப் பயந்து ஓடுவது வழக்கமில்லை. ஆகவே, நீர் என்னிடம் வருவதைக்காட்டிலும் நானே உம்மிடம் வருவது நலமென்று நினைத்து வந்தேன். இப்பவும் எனக்கு உங்களுடைய நியாயஸ்தலங்களைப்பற்றியாவது சிறைச்சாலைகளைப்பற்றியாவது கவலையேயில்லை. அப்படியே நான் மரணதண்டனை விதிக்கப்பட்டு உயிரை இழக்க நேரிட்டால், நான் என்னால் முடிந்தவரையில் இதுவரையும் ஏழைகளுக்கு உதவிபுரிந்தேனென்ற திருப்தியுடனும், நான் இறந்துவிட்டபோதிலும் என்னைச்சேர்ந்த மற்றவர்கள் அக்காரியத்தை மேலும் செய்துவருவார்களென்ற நம்பிக்கையுடனும் இறப்பேன். சரி; நீங்கள் உடனே என்னைக் கைதுசெய்யலாம். வேண்டுமானால் இதோ என் கரங்களுக்கு விலங்கிடும்." என்று கூறியவண்ணம், அலக்ஷியமாய்த் தன் கைகளை நீட்டினான்.

அத்தியாயம் 15.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்து 2 மாத காலமாய்விட்டது.

பிறகு நடந்த விசாரணையில் முத்தையா செட்டியாரின் குமாரன் வாசுதேவனும் நடேச முதலியாருடைய குமாரன் ராமானுஜமும் நிரபராதிகளென்று எளிதில் ரூபிக்கப்பட்டு விடுதலையடைந்தனர். நாகலிங்க நாடான் மரண தண்டனை விதிக்கப்பட்டு, அவ் விசாரணை நடந்த மறுதினமே தூக்கிற்போட ஏற்பாடாயிருந்தபோதிலும் அதே இரவு அவன் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்டான். அவ் விஷயத்தை அறிந்த ஜனங்களுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை.

ராமானுஜம் விடுதலையடைந்த எட்டாவது தினம் அவனுக்கும் டாக்டர் கேசவ முதலியாருடைய அருமை மகள் மரகதவல்லிக்கும் விமரிசையாய் விவாஹம் நடந்தேறியது. தற்சமயம் அப்பெண்மணி தன் புருஷனுடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள். டாக்டர் கேசவ முதலியார், தன் செல்வப் புதல்வி அவள் காதலித்த புருஷனுடன் சந்தோஷிப்பதைக் கண்டு, பரமானந்தமடைந்தவராய் தன் தமக்கையுடன் காலம் கழித்துவருகிறார்.

முத்தையா செட்டியாருடைய மகன் வாசுதேவன் தன் மனைவி தங்கம்மாளுடன், பார்ப்போர் பொறாமைகொள்ளத் தக்கவிதம், மிகவும் சந்தோஷமாயிருந்துவருகிறான். அவனுக்குத் தன் தந்தை சேகரித்த சொத்தில் குறைந்தது பாதியாவது ஏழை ஜனங்களைக் கஷ்டப்படுத்தி சேர்க்கப்பட்டிருக்குமென்று அபிப்பிராயமாகையால், அவ் வுத்தம குணவாலிபன், அதைக்கொண்டு, மகா உத்தமியாகிய தன் தாயாரின் பேரில் ஒரு தர்ம சத்திரம் கட்டி, அதில் தினந்தோறும் பல ஏழை ஜனங்களுக்கு அன்னமிட்டுவருகிறான்.

நம் வக்கீல் குமாஸ்தா முத்துராமன், கோபால செட்டியாருடைய மளிகைக் கடையில் 35 ரூ சம்பளத்தில் கணக்

கப்பிள்ளையாக நியமிக்கப்பட்டு, தன் தாயார் சுப்புப்பாட்டியை மிகவும் மரியாதையுடன் காப்பாற்றிவருகிறான். அவனுடைய தமயன் கிட்டு, தன் கெட்ட வழக்கங்களை அடியுடன் விட்டுவிட்டு, நல்ல பெயர் வாங்க ஆரம்பித்துவிட்டானென்பதை அறிய நம் நேயர்கள் சந்தோஷப்படுவார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் குருஸ்வாமி முதலியார், நாகலிங்க நாடான் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்டானென்பதை அறிந்ததும், பெட்டிப் பாம்புபோல் அடங்கி, தன் வழக்கத்திற்கு விரோதமாய் ஜனங்களிடம் மரியாதையும் பிரியமும் காட்டுவதைக் கண்டு அவ்வூர் வாசிகள் அனைவரும் வியப்புற்றனர். அவருடைய மனைவி அகாலத்தில் ஸ்வாமி தர்சனத்திற்குப் போகும் வழக்கத்தை அடியுடன் நிறுத்திவிட்டாள்.

இன்ஸ்பெக்டர் சபேசய்யர், வரவர அதிகரிக்கும் கீர்த்தியுடன் எல்லோராலும் புகழப்பட்டு, அவ்வூருக்கே நடுநாயகம்போல் விளங்கிவருகிறார்.

நாம் சொல்லும் தினம் பிற்பகல் 3 மணி இருக்கும்.

அச்சமயம் நம் மரகதவல்லி, தன் புருஷன் வீட்டின் முன் கூடத்தில் போடப்பட்டிருந்த ஒரு அழகிய ஊஞ்சற் பலகையில் இன்பசாகரத்தில் மிதந்தவளாய் மெய்மறந்துட்கார்ந்துகொண்டிருந்தனள். சற்று நேரத்திற்கெல்லாம் அவளுடைய புருஷன் ராமானுஜம் அங்குவர, அக் கட்டழகி நாணத்துடன் எழுந்து புன்முறுவல் செய்தவண்ணம் நின்றாள். நம் ராமானுஜம் காதல் தளும்பிய தன் கண்களின் பார்வையை தன் மனைவியின்மீது நாட்டி சுவர்க்க போகத்திலாழ்ந்து பரவசமடைந்தவன்போல் காணப்பட்டான். பிறகு, மெல்ல முன்சென்று அவளைத் தொட்டு,

“ மரகதம்! இன்று என் நண்பன் பாலகிருஷ்ணனுடைய விவாஹம் நிச்சயமாய்விட்டது. அடுத்தவாரம் இதே ஊரில் கல்யாணம் நடக்கும்.” என்று கூறவே, மரகதவல்லி, ஆவலுடன்,

"அப்படியா? பெண் யாரோ?" என்று வினவினள். ராமானுஜம், அன்பொழுகும் குரலில்,

"அடாடா! பெண் யாரென்பது உனக்குத் தெரியாதா? சரி; நானும் பாலகிருஷ்ணனும் எவ்விதம் இணையற்ற நண்பர்களோ அதுபோலவே நீயும் அப் பெண்மணியும் நிகரற்ற தோழிகள்." என்று விடையளிக்கவே, மரகதவல்லி, வியப்பும் சந்தோஷமும் கலந்த குரலில்,

"என்ன? என் அருமைத் தோழி சுலோசனாவா?" என்று வினவினள்.

ராமா: ஆம்; அவளே.

மரகதம்: பேஷ்! இதைக் கேட்க நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

ராமா:— ஆமாம்; நான் வரும்பொழுது மெய்மறந்துட்கார்ந்துகொண்டிருந்தாயே; என்ன விசேஷம்?

மரகதம்:— ஒன்றுமில்லை. இந்த இரண்டுமூன்றுமாத காலத்திற்குள் நடந்த சம்பவங்களையெல்லாம் நினைத்து ஆச்சர்யப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆஹா! எல்லாம் சாதாரணமாய் நாம் வாசிக்கும் நாவல்களில் கூறப்படும் சம்பவங்கள் போலல்லவோ இருக்கின்றன?

ராமா: வாஸ்தவமே. இதை ஒரு புஸ்தக ரூபமாக வெளியிட ஏற்பாடு செய்யலாமென்றிருக்கிறேன்.

மரகதம்:— பேஷ்! அப்படியா? ஆனால் உங்களுக்கு நாவல் எழுதவும் தெரியுமோ?

ராமா:— தெரியாது. ஆனால் கும்பகோணத்தில் என் நண்பனொருவன் இருக்கிறான். அவனுக்கு நாவல் எழுதுவதில் மிகவும் பிரியமுண்டு. ஆகவே, எல்லாவற்றையும் அவனுக்குத் தெரிவித்து, உடனே எழுதச் சொல்லலாமென்றிருக்கிறேன்.

மரகதம்:— ஆமாம்; அப் புஸ்தகத்திற்குப் பெயர் என்ன வைப்பதாய் உத்தேசம்?

ராமா:— அதுதான் எனக்கும் புரியவில்லை. ஏனென்றால், இதில் முக்கியமாய் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருடைய பெயரையும் வைத்து ஏற்கனவே புஸ்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

மரகதம்:— என் மனதில் ஒரு யோசனை தோன்றுகிறது. இதில் எல்லோரைக் காட்டிலும் அதிக முக்கியமாய் சம்பந்தப்பட்டவன் நாகலிங்க நாடான். அவன் கொள்ளையடிப்பதும் கொலைசெய்ததும் வாஸ்தவமே. ஆனால் அவன் செய்த குற்றங்கள், அவன் ஏழைகளின்பொருட்டு செய்துவரும் நன்மைகளை உத்தேசிக்குங்கால், பறந்துபோய்விடும். ஆகவே, இது உங்களுக்கும் உசிதமென்று தோன்றினால் நம்முடைய நாவலுக்கு "நாகலிங்க நாடான் அல்லது ஏழைகளின் ஊழியன்" என்று பெயர் வைக்கலாம்.

ராமா:— சபாஷ்!

சுபம்!! சுபம்!! சுபம்!!

188786

"பால விநோதினி"

1931ஆம் அக்டோபர்மீ பஞ்சாங்கம்.

தேதி	த.மீ	வார. திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன.	
1	கரு	வியா	சது ௫-௪௮, ஸ்வா ௪௩-௫௪, [தி கஉ-௪௨, கார்-உப,ம.
2	கசு	வெ	பஞ் ௭-௫௨, ரோ ௪௭-௩௪, [தி உகூ-௪௭, ம,சி.
3	கஎ	சனி	ஷஷ்ந அ-௪௨, மிரு ௩௯-௨௰, [தி உ-கூ,மஹாவீ-பா, சி,ம.
4	கஅ	ஞாயி	ஸப் ௮-௩௬, திரு ௩௯-௫௩, [தி க௦-௩௨,மத்யாஷ்டமி, சி.
5	ககூ	திங்	அஷ் கூ-௩௫, புன ௪௮-௫௩, [தி ௩ உஉ, அவிதவாநவமி, அ,சி.
6	உ௦	செவ்	நவ ௩-௪௬, பூச ௪எ-கூ, தி அ ௩எ, சி [ஸமா ஈ,சி.
7	உக	புத	தெ ௦ ௪, ஏகா ௫௫-உ௩, ஆயி ௬௪-உ௬, தி ௬எ-௪௬,
8	உஉ	வியா	துவா ௫௦ க௩,மக ௪௬-அ,தி கஉ-௪௭,தி ௫௬-௫௩,அ,சி
9	உ௩	வெ	திர ௪௯-௩உ,பூர ௩எ-உ௩, சே௩-உ௪, தி ௫௪-௬௬, சி.
10	உ௪	சனி	சது ௩அ-௩௬,உத் ௩௩-உ௩, தி ௫உ-௫அ,கா-போ-அ,ம
11	உ௫	ஞாயி	● ௩உ-௪௫, ஹஸ் உகூ-௬௩, தி ௪அ-௦ அமா,அ,சி.
12	உ௬	திங்	பிர உகூ-௫அ,சித் உ௫-உ௬,தி ௩அ-௩௦, நவரா,—,சி,அ
13	உஎ	செவ்	துவி உ௬-௫௦,சுவா உ௬-௪௬ தி ௩௫-௬,திர துவய, சி,ம.
14	உஅ	புத	திரு ௬௬-௩௬,விசா ௬அ-௩௬, தி உஅ-கூ, சது-விரு, சி.
15	உகூ	வியா	சது கஉ கஉ,அனு ௬கூ-உ,தி உகூ-௩௬,உபாங்கல-வி,சி
16	௩௦	வெ	பஞ் அ-௪அ,கே ௬௯-உ௩, தி ௩௪-௬௩, ஸரஸ்வதி ஆவா,
17	க	சனி	ஷஷ்ந கூ-உ௩,மூல ௬௩-௫௩,தி கூ-௫௫, [ஷஷ்-உ,ம,அ. [தி ௩அ-எ, தலாரயி உகூ-௫, சி.
18	உ	ஞாய	ஸப் ௫ ௬உ, பூரா ௬௯-உஅ, தி ௩௫-௫, சி,அ.
19	௩	திங	அஷ் ௫-௬கூ, உத்ரா ௬கூ-௬கூ, தி உகூ-௫௦, மஹாநவமி, [ஆயுதபூஜை, சிரவணஉப. ம,அ.
20	ஐப் ௪	செவ்	நவ கூ-௪௩,திரு ௬௬ உ௪,தி ௩௦-எ விஜயதச,மத்வஜய,
21	பசி ௫	புத	தெ கூ-உ௩, அவி உ௩-௪௦,தி ௪௩ ௬௪,ம,சி [வை-சி,சி
22	௬	வியா	ஏகா ௬௩-எ,சத உஅ-௫௩,தி ௪கூ-உஅ, ஸர்வஏகா,ம,சி,
23	எ	வெ	துவா ௬எ-௩அ பூரட் ௩௯-௪கூ,தி ௦-௦, பிரதோஷம்,சி.
24	அ	சனி	திர உஉ-௪௩,உத்ரட் ௪௬-௬உ,தி ௬-உஉ,விருச்சி ௬-௪எ,
25	கூ	ஞாய	சது உஎ-௫கூ,ரே ௪எ-௩கூ தி ௬௯-உ௪, [அதிதி,சி,ம. [துன்றைபிஷேகம், அ,சி.
26	க௦	திங்	○ ௩உ-௫௦ அசு ௫௩-௩௫,தி ௪உ-௩௫, சி
27	கக	செவ்	பிர ௩எ-அ, பர ௫அ-௫கூ, தி ௬கூ-௪௫, சி.
28	கஉ	புத	துவி ௪௦-உஎ, ❋ கூ௦-௦, தி ௩௬-௩, கார்-உப, அ.
29	க௩	வியா	திரு ௪உ-௪௬, கார் ௩-அ, தி ௪௫ ௬௫, ம.
30	க௪	வெ	சது ௪௩-௩௪,ரோ கூ-௬கூ,தி உ௦-௪௫, ஸங் [illegible], ம,சி,
31	க௫	சனி	பஞ் ௪௩-௬௦, மிரு அ-கூ, தி உகூ-உ௩, சி,ம.

ராகு			
	8 துலா க / 9 வ-குஜ / 12 துலா-பு / 17 ,, ரவி / 28 வரு-பு		வி
சனி		குஜ	பு-சு / ர-கே